எங்கள்

# முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்

2025 ஒக்ரோபர் விலை ரூ. 100/=



23.09.2025 மாலை யாழ்ப்பாணம் எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெற்ற வி.ரி.இளங்கோவன் மற்றும் பத்மா இளங்கோவன் ஆகியோரின் 5 நூல்களின் வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்:



14.09.2025 மாலை மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர் கலைவிழாவில் சில காட்சிகள்



# எங்கள் முற்றம்

## கலை இலக்கிய சமூக இதழ்

**ஆசிரியர் : அழ. பகீரதன்**

ISSN NO : 2783–8889

இதழ் : 07 ஒக்ரோபர் 2025


*ஆடுதல், பாடுதல், சித்திரம் –கவி*
*யாதி யினைய கலைகளில் – உள்ளம்*
*ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்*
*ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்*
*நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில*
*நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்*
*காடு புதரில் வளரினும் – தெய்வக்*
*காவனம் என்றதைப் போற்றலாம்!*

*–பாரதி*


ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை பொறுப்பாகாது.



இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்

நிழற்படங்கள்/அலோசனை: எஸ். அனுஜன்

ஆலோசகர்கள் :

மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்

சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்

அச்சுப் பதிவு :

ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு

வெளியீடு :

**மறுமலர்ச்சி மன்றம்,**
**காலையடி, பண்டத்தரிப்பு.**

**மக்கள் கலை இலக்கியப் பேரவை**
**இல 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.**



*Email : marumalarchy1972@gmail.com*

*T.P : +94 77 104 1945*


நாம் ‘எங்கள் முற்றம்’ ஏழாவது இதழில் உங்களுடன் கலந்து பேசுவதில் பெருமை கொள்கின்றோம். ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாகவும் சிறுவர் தினம் முதியோர் தினம் எனும் சர்வதேச தினங்களையும் உள்ளடக்கி நவராத்திரி, தீபாவளி, கந்தசட்டி என ஆன்மீக விழாக்களையும் தன்னகத்தே கொண்டு மலர்ந்திருக்கின்றது.

மானுட வாழ்வின் மகத்துவங்கள் வியப்புக்குரியதாகவும், வழிவழியாகத் தொடர்வனவாகவும் எதிர்காலத்திற்கான பாதைகளைத் திறப்பனவாகவும் உள்ளன.

அரசியல் சமூக விடுதலை சார்ந்து ஒக்ரோபர் எழுச்சி யாழ்ப்பாண சூழலில் நினைவுகூரப்படுவதாக அமைந்துள்ளது. சமூக விடுதலை சார்ந்த முன்னோக்குச் சிந்தனை இன்னமும் அவசியமாகவே நோக்கப்படுகின்றது. இரு தேசிய இனங்களில் விடுதலைத் தேசியம் என்ற கருத்துருவாக்கம் இன்னும் வீச்சுப்பெறவேண்டும் என்ற பார்வை காலத்தின் தேவையாக உணரப்படுகின்றது.

ஒக்ரோபர் மாதத்தில் நாளொரு நூல் வெளியீடு என ஜீவநதி வெளியீட்டகம் சென்ற ஆண்டில் சாதித்துக்காட்டியதன் தொடர்ச்சி இந்த ஆண்டும் இந்த மாதத்தில் வீச்சுப்பெறுவது ஆரோக்கியமானதாக அமைந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நூலகம் ஆரம்பித்துவைத்தமையும் பாராட்டுக்குரியதாக உள்ளது.

இந்த இதழிலும் முன்னைய இரு இதழ்களிலும் பயில்நிலம் சிறுகதைகளாக இடம்பெற்றவை சிறகுகள் அமைப்பு சிறுகதைப் போட்டிக்காக கிடைக்கப்பெற்றன. அவர்களுக்கு நன்றிகள்.

பொதுவாகவே வாசிப்பு பழக்கம் அருகிவருகின்றது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே ஆயினும் சிறுவர்கள் மத்தியில் வாசிப்புக்கான அவா இருப்பதைக் கருத்தில் எடுக்கவேண்டியதாகவே எம்முன் விரிகின்ற எதிர்காலம் நோக்கப்படுகின்றது.

ஆகவேதான் ‘எங்கள் முற்றம்’ இதழுக்கான ஆக்கங்களை உற்சாகத்துடன் எதிர்பார்த்து நாமும்...

– ஆசிரியர்

## உள்ளே....


தென்புலத்தார் தொழுதேற்றல்

- வீரகாவியம் 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை – 25

நூல் அறிமுகம்

- மூத்த தமிழ் ஊடகவியலாளரின் முக்கியமானதொரு புத்தகம் – எஸ். தனுஜன் – 30

திரை விமர்சனம்

- பொம்மை திரைப்படம் –சத்தியமலர இரவீந்திரன் –32
- பொம்மை மூத்த எழுத்தாளர் அ. ஜேசுராசா பார்வையில் –34

கவிதைகள்

- வயல் – குழந்தை இரா. இராஜேஸ்வரன் – 03
- வறுமை – பண்டைநகர் நாயகன் –04
- தனித்தவரே நீ – இதயராசன் –07
- ஒற்றுமை – கவிமேகம் காளமேகம் – 10
- சூரியன் அண்ணா – ஈழத்துத் தேவன் பூதனார் –24
- வாழ்வதற்கு – இணுவையூர் இலட்சுமிபுத்திரன் – 40

பயில் நிலம் -சிறுகதைகள்

- எங்கே செல்லும் இந்தப் பயணம்
  – திருச்செல்வம் திருநிறைச் செல்வி – 05
- பதில் – எம். ஏ. ஏ. சப்றான் – 11
- வாய்ச்சொல்லின் வீரரடி எச். என். அஸீமா – 13
- சிறகொடிக்கும் பறவையினம் சரவணன் – 17

சிறுவர் கதை

- ஐந்து ஆண்டுகளின் பின் கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் விடப்படும் அரசன் – காலைச் செஞ்சூரியன் – 08

ஆய்வரங்கு

- இரு இனத் தேசியங்களில் விடுதலைத் தேசியம்
  – பீ. முத்துலிங்கம் – 15

ஆரோக்கியம்

- கீரையின் சிறப்பு: ஆரோக்கியமும் சுவையும் –23

தொடர்

- வேதாளமும் முருங்கையும் – அசன் –37
- தீரணியனின் திருவிளையாடல் – செண்பகன் –28

பதிவும் பகிர்வும்

- யாழ் சர்வதேச புத்தகத் திருவிழா – 09

மூத்தோர் படையல்

- மனிதமாடு – சிறுகதை – அ. செல. முருகானந்தம் – 19
- வாணி தா மூன்று வரம்– கவிதை சில்லையூர் செல்வராசன் –35
- நமது தேவை – கவிதை– இ. முருகையன் – 30

கருத்துப் பகிர்வு

- அநுரவின் தலைமையில் – நடுவிலான் – 22


அட்டை ஓவியம் :

ஓவியர் ஆசை இராசையா

## மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மழலையர் சந்தை காட்சிகள்





















# வயல்

குழந்தை இரா. இராஜேஸ்வரன்

கழனி உழவேண்டும் – முனியப்பரே
வரம்பு சீராய்க் கட்டவேண்டும் – முனியப்பரே
நீர்நிலை சுத்தம் செய்வோம் – முனியப்பரே
குப்பை சாணம் போடவேண்டும் – முனியப்பரே



சமதரை நிலமாக்குவோம் – முனியப்பரே
பாத்தி வடிவாய்க் கட்ட வேண்டும் – முனியப்பரே
ஆடுகாலில் துலாவேண்டும் – முனியப்பரே
ஆறுபோல் நீர்பாய்ச்சுவோம் – முனியப்பரே

நாற்று நடவேண்டும் – முனியப்பரே
நல்லமழை பெய்யவேண்டும் – முனியப்பரே
சேற்றுநிலம் வேண்டும் – முனியப்பரே
செழித்துப் பயிர் வளரவேண்டும் – முனியப்பரே

கதிரவன் ஒளிவேண்டும் – முனியப்பரே
மணியோசை கேட்கவேண்டும் – முனியப்பரே
தென்றல் வீச வேண்டும் – முனியப்பரே
தேன்நிலவு தெரியவேண்டும் – முனியப்பரே

காவலுக்கு வெருளி வேண்டும் – முனியப்பரே
களையெடுக்க பெண்கள் வேண்டும் – முனியப்பரே
தென்றல் வீச வேண்டும் – முனியப்பரே
தேன்நிலவு தெரிய வேண்டும் – முனியப்பரே

கவனொன்று கையில் வேண்டும் – முனியப்பரே
கிளிகுருவி கலைக்க வேண்டும் – முனியப்பரே
நிறைமாதப் பயிர் வேண்டும் – முனியப்பரே
சாய்ந்தநெல்லு வெட்ட வேண்டும் – முனியப்பரே

அருவி அடிக்க வேண்டும் – முனியப்பரே
குல்லம் போட்டு தூவ வேண்டும் – முனியப்பரே
பழஞ்சோறு உண்ண வேண்டும் – முனியப்பரே
பச்சை மிளகாய் உறைக்க வேண்டும் – முனியப்பரே

சூடு மிதிக்க வேண்டும் – முனியப்பரே
பையில் போட்டுக் கட்ட வேண்டும் – முனியப்பரே
மாட்டு வண்டி வேண்டும் – முனியப்பரே
மகிழ்ந்து மனை போக வேண்டும் – முனியப்பரே

கவிதை

# வறுமை

-பண்டைநகர் நாயகன்-

*மானிட சென்மமாய் மனுவுரு எடுத்தேன்
பாரினில் வளமாய் வாழ்ந்திட நினைத்தேன்
வேலிகள் தாண்டிடும் ஆசைகள் வளர்த்தேன்
வேதனையுடன் நான் கண்டதோ வறுமை*

*அன்னையின் மடியினில் அன்பினைப் பெற்றேன்
தந்தையின் அணைப்பில் அறிவினைப் பெற்றேன்
ஆண்டவன் அருளால் அனைத்துமே பெற்றேன்
அடங்கிடா ஆசையால் அடைந்ததோ வறுமை*

*படிப்பினில் சிகரம் தொட்டிட நினைத்தேன்
பட்டங்கள் கிட்டிடாமல் பெற்றதும் வறுமை
ஆஸ்திகள் சேர்த்து நான் ஆண்டிடத் துடித்தேன்
ஆசைகள் எல்லை மீறிட பெற்றதும் வறுமை*

*பாசங்கள் தந்திடும் உறவுகள் நாடினேன்
வேசங்கள் புரிந்ததால் உறவிலும் வறுமை
பதவியில் உயர்வுகள் பெற்றிடத் துடித்தேன்
பண்புடன் பணிவுகளற்றதால் பெற்றதும் வறுமை*

*உடமைகள் சேர்த்து நான் உயர்ந்திடத் துடித்தேன்
ஊதியம் நிறைவில்லா உணர்ந்ததும் வறுமை
உடல் உள நலம் வேண்டித்தினம் சுகம் தேடினேன்
பழக்கமும் புழக்கமும் தந்த்தும் வறுமை*

*அன்பினைக் கொடுத்து அன்பினைத் தேடினேன்
சுயநல அன்பென்று அதனிலும் வறுமை
பாதைகள் யாவும் பாதகம் ஆனதால்
பயணத்தில் நான் கண்டதும் வறுமை*

*ஆசைகள் அலை மோத அறிவுகள் தடுமாற
அமைதிகள் பறந்தோட ஆகுமா செழுமை?
நேர்வழி தேடாமல் புதுவழி நாடினேன்
நேர்ந்தது எனக்கு எங்கும் வறுமை*

*தேடிடும் யாவும் தேவையை மீறினால்
நாடிடும் யாவும் நலமே ஆகிடுமா?
ஆசையின் வழிகள் ஒடுங்கியே திறந்தால்
வறுமைகள் மாறி நல்ல செழுமைகள் சேரும்*



*பயில்நிலம்*
*சிறுகதை*

# எங்கே செல்லும் இந்தப் பயணம்

*திருச்செல்வம் திருநிறைச் செல்வி*

காரிருள் நிறைந்த நள்ளிரவில், ஊரடங்கிய வேளை தளர்ந்து, நொடிந்து போன தசைக்கூட்டத்திலும் வீரிய நடைபோட்டு, உயிர் உறையும் கூதலும் மனம் செந்தழலாய்க் கொதிக்க, கொடுமை நிறைந்த இவ்வுலகின் கொடூரத்தை முழுமையாய் ருசித்த மூர்ச்சத்தோடு, நெற்கதிர்கள், நீர்நிலைகள் சாலையின் இருபுறமும் சலசலக்க, தவளைகள் நாதம் முழங்க, பாதணிகளற்ற பாதங்கள் ஒத்திசைக்க, அங்கங்கு மின்மினிப் பூச்சிகளின் ஒளி அலங்கரிப்புக்களுடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது சரஸ்வதியின் நடைபவனி.

"இறைவா... என்ர ஈசுவரா.."

சரஸ்வதியின் முணுமுணுப்பு லேசாக காதுகளை வருடுகிறது.

இறைவனை நொந்துகொள்கிறாள்.

ஐந்து மணி நேரங்கள் கடந்தும் அவளின் நடைபவனி அவளுக்கு சலிப்புத் தட்டவில்லை. நடையின் வேகம் மாறாக்கதியைப் பின்பற்றுகிறது.

எங்கு செல்கிறது இவளின் பயணம்?

நாமும் பின் தொடர்ந்து பார்க்கலாம்...

அவளின் மனம் எதையோ நினைத்து கலங்குகிறது, கண்களில் இருந்து கண்ணீரூற்று பெருக்கெடுக்கின்றது.

அங்கங்கு அலைபாயும் தலைமுடிகளை கைகளால் வாரிக்கட்ட முயல்கிறாள். கண்களில் இருந்து வழியும் துளிகள் அளிக்கும் அசௌகரியத்தை உணர்கிறாள். திறம்படக் கசங்கிய சேலை நுனி கொண்டு முகத்தைத் துடைத்துக் கொள்கிறாள்.

அந்தச சேலை கந்தனின் நினைவை அவள் முன் நிறுத்துகிறது.

"என்ர வீட்டுக்காரர் எடுத்துக்குடுத்ததில் இது ஒண்ணு தான் இந்த உலகத்திலயே எனக்கு சொந்தமா இருக்கு கடவுளே..."

அவளின் மனத் தவிப்பின் வெளிப்பாடு அது.

பொழுது புலரத் தொடங்குகிறது. கதிரவன் கிழக்கு வானில் இருட் கதவினைத் திறந்து, தன் கதிர்க்கரங்களை நீட்டத் தொடங்குகிறான். புல்லினங்கள் சஞ்சரிக்கின்றன. மணியோசை நான்கு பக்கமும் முழங்குகிறது. கூதல் கொஞ்சம் கொஞ்சமாக அகல முயல்கிறது.

அவள் மனம் புது ஸ்பரிசத்தை உணர்கிறது.

செட்டிக்குளத்தின் பிரதான வீதியின் மீது அவளின் பாதம் பதிகிறது.

அவளின் கணவன் கந்தன். இறந்து முப்பது வருடங்களிற்கு பிறகு இன்றுதான் அந்த வீதி அவளின் பாதத்தின் தொடுகையை உணர்கிறது.

அது அவ்வூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான இடமாகத் திகழ்ந்தது.

எத்தனை மாடமாளிகைகள்...? எத்தனை வியாபார நிலையங்கள்...? எத்தனை மோட்டார் வாகனங்கள்...? அத்தனையும் அவளிற்கு வியப்பை உண்டு பண்ணியது. இதற்கு முன் இத்தகைய வர்ணஜாலங்களை கண்டதில்லை அவள்.

அதற்கிடையிலும் பல ஏழை மக்கள் படும் அவலங்களையும் அவலக் குரல்களையும் அவள் பயணம் கடந்து செல்கிறது.

பல சாலைகள் கடந்தும் அவள் பயணம் எங்கு செல்கிறதோ தெரியவில்லை...

"அம்மா... அம்மா..."

ஒரு குடிசையின வெளியில், விருந்தினர்களின் வருகையை எதிர்பார்த்து அமர்வதற்கென களிமண் கொண்டு ஆக்கிய சிம்மாசனத்தில் உறங்கிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தையின் அலரல் அது.

அந்தக் குழந்தையின் தாய் அலறல் சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்து கேள்விக்குறிபோல் வளைந்து வெளியே வந்து தன் பிள்ளையை அணைக்கரம்

கொண்டு கட்டித்தழுவி தன்கைகளால் லேசாக வருடுகிறாள்.

குழந்தையின் கதறல் குறைந்து, அந்தத் தாயின் அன்பின் வலிமை அது.

நடுவீதியில், இதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த சரஸ்வதிக்கு தன் மகன் அன்பரசனின் ஞாபகம் துளிர்த்துவிட்டது.

அவளின் இருபத்தைந்தாவது வயதில் கணவனான கந்தன் ஒரு விபத்தில் இறந்துபோக, மூன்றே வயதான அன்புறவை எப்படி வளர்ப்பது என்பதறியால் திகைத்தாள்.

அவளிற்கென இருந்தது ஓரிரு வயல் நிலங்களும் அதிலமைந்த சிறு குடிசையும்தான்.

"எந்தவொரு இயற்கை அனர்த்தத்திற்கும் என்னால் ஈடு கொடுக்க முடியும்" என மார்பை உயர்த்தி நிற்பது போல் தோற்றமளித்தது.



அதன் கால்கள் அவ்வளவு உறுதியாகவும், வைக்கோலால் அடர்த்தியாகவும் நேர்த்தியாகவும் போர்க்கப்பட்டிருந்து அக்குடிசை. அதனைச் சுற்றி சுமார் இரு மயில்கள் வரை வயல் நிலங்களே காணப்பட்டன.

சரஸ்வதி அன்புவை பராமரிக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களையும் வயல் நிலங்களில் வேலை செய்வதிலேயே கழித்து வந்தாள்.

அதிலிருந்து கிடைத்த வருமானங்களை அன்புவின உயர்கல்வித் தேவைக்காகவும் ஆடம்பரச் செலவிற்காகவுமே செலவளித்து வந்தார்.

அவள் தனக்கென எந்தவொரு ஆசையோ, தேவையோ கொண்டிருந்ததில்லை. இதனை நன்கறிந்த அன்பு ஒரு கணப்பொழுது தானும் சிந்தித்ததில்லை.

"என்ர பிள்ள மனேச்சர் ஆயிட்டு. இனி எனக்கு கவலயே இல்ல... மாசத்துக்கு ஒரு லச்சத்தி எண்பத்தாறாயிரமாம் சம்பளம்... ம்ம்ம்... எனி நான் ராசாத்தி மாரி இருக்கலாம்..."

இது அவளின் மன எண்ணோட்டம். அன்பு இப்போது இலங்கை வங்கியின் கன்னியாகுமரி கிளையின் மனேச்சர்.

அமாவாசை இருட்டில் சற்றுத் தொலைவில் பங்களாவிற்கு நிகரான தோற்றத்தையுடைய வீட்டிலிருந்து வரும் மின்விளக்குகளின் ஒளி நம் கண்களைக் கவருகின்றது.

சற்று அருகில் சென்று பார்ப்போம்...

வீட்டின் வாயிலின் இருபுறமும் பூஞ்சோலைகள், மின் அலங்கரிப்பு, வர்ணப்பூச்சு, வரவேற்பு சின்னங்கள் என அனைத்தும் எம்மை பிரம்மிப்பில் ஆழ்த்துகிறது.

இங்குதான் சரஸ்வதி இருக்கிறாள், ஆம், அன்புவின் சம்பளத்தின் பரிணாமம் இது.

வீட்டினுள் எல்.இ.டி ரிவியில் அன்பு 'அன்னை ஓர் ஆலயம்' படத்தை மிகவும் உருக்கமான நிலையில் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கிறான்.

"அம்மா... அப்பா... என்ர ஈஸ்வரா..."

கிணத்துக் கட்டிலிருந்து வரும் அனுங்கல்.

அது, சரஸ்வதியின் குரல்...

ஒரு வேலைக்காரி கூட அவளுடன் ஒப்பிட்டு பெருமிதம் கொள்ளும் தோற்றம். ஒற்றைக்காதில் குச்சித்தோடு, கந்தனின் நினைவு கூரும் திறம்பட கசங்கிய சேலை, கைகளிற்கு கட்டுப்படாத தலைமுடி.

கிணற்றுக்கட்டில், நாளை விருந்திற்கு வரவிருக்கும் அன்புவின் உயர் அதிகாரிகளை உபசரிப்பதற்காக அன்புவால் அதிவிலை கொடுத்து வாங்கிய மாபிள் கோப்பைகளைச் சுத்தம் செய்துகொண்டு இருக்கிறது அவள் கைகள். முன்போல் அவளால் எந்த வேலைகளையும் செய்து கொள்ள முடிவதில்லை. இதனால் அன்புவின் வசைச் சொல்லிற்கும் ஆளாகி விடுவாள்.

திடீரென ஒரு பலத்த சத்தம், அன்புவின் உட்காதுவரை சென்று பயணத்தை முடிக்கிறது.

அன்பு விரைவாக வந்து சரஸ்வதி இருக்கும்

இடத்தை அடைந்தான். கற்தரையில் மாபிள்கள் கோலம் போட்டிருப்பதைக் கண்டான்.

ஆம், சரஸ்தியின் பற்றிலிருந்து நழுவி கோப்பைகள் கதிரையில் விழுந்து நொருங்கிவிட்டன.

அன்புவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கோபம் உச்சிக் கேறியவனாய் அவளை உற்று நோக்கி தன் வலது கையால் அவளின் இடது கன்னத்தை பதம் பார்த்துவிட்டான் அன்பு.

கண்கள் செவ்வானமெனச் சிவக்க, உள்ளம் பதை பதைக்க, உலக இயக்கம் தடைப்பட்டார் போல ஒடிந்து தலையில் விழுகிறாள் சரஸ்வதி,

அன்புவின் செயலை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. செய்வதறியாது திகைத்தாள், அவளுக்கு வார்த்தைகளால் சொல்ல முடியாத ஏதோ ஒன்றை உணர்த்தியது போல் இருந்தது அவன் செயல். அவளுக்கு அங்கிருக்க விருப்புக் கொள்ளவில்லை.

"எங்க போற...? என்ன.. செய்ற..? எனக்கு ஆர் இருக்கினம்...?" எனப் பல கேள்விகள் மனதிற்குள்.

செட்டிக்குளத்திற்கு அருகிலுள்ள மூதூரில் 'அன்பாலயம்' எனும் முதியோர் இல்லம் இருப்பது நினைவில் வந்தது.

சற்றும் தாமதிக்க விரும்பாதவளாய் நள்ளிரவு என்பதையும் பொருட்படுத்தாது புறப்பட்டாள்.

சரஸ்வதியின் நடைபவனி அதனை நோக்கித்தான் நகர்கிறது.

"அய்யோ...! அய்யோ..!"

தன் கரங்களில் குழந்தையைத் தழுவிக் கொண்டிருக்கும் தாயின் அலறல்.

நிகழ்காலத்தின் விளிம்பிற்கு வந்தாள் சரஸ்வதி.

அவளை நோக்கி பார ஊர்தி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து நூலிடை அளவு வந்துவிட்டது.

"ஆ...:" ஓர் அலறல் திடீரெனத் தொடங்கி கணப் பொழுதில் அடங்கியது.

அது சரஸ்வதியின் அலறல்.

பார ஊர்தி தன் இலக்கை அடைந்துவிட்டது. ◻

---

கவிதை

# தனித்தவரே நீ

***இதயராசன்***

*விளைநிலம்*
*உழுததும் இல்லை*
*விதைத்ததும் இல்லை*
*பசித்து வந்தோருக்கு*
*ஒரு பருக்கையாவது*
*கொடுத்ததும் இல்லை*

*வழிப்போக்கருக்கு*
*ஒரு புன்னகை*
*தவறியும் சிந்தியது இல்லை*
*குழந்தை முகம் பார்த்து*
*இன்னுரை சொன்னதே இல்லை*

*கொண்டும் கொடுத்தும்*
*வாழும் கலையில் தேறாத*
*தற்குறிகள் தனித்து நின்று*
*தரணியை வென்றாலும்*
*தனித்தவரே நீ! - என்றும்*
*தனித்தவரே நீ!*



*சிறுவர் கதை*

# ஐந்து ஆண்டுகளின் பின் கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் விடப்படும் அரசன்

*காலைச் செஞ்சூரியன்*

முன்னொரு காலத்திலே சந்திர நதி என்ற பாரிய ஆற்றங் கரையிலே, தந்திரபுரி என்று ஒரு நாடு இருந்தது. அதன் மறு கரையில் கொடிய மிருகங்கள் வாழும் அடர்ந்த காடு இருந்தது.

தந்திரபுரியில் ஒரு விசித்திரமான வழக்கம் நிலவிவந்தது. அந்த நாட்டை இறுதியாக ஆட்சி செய்த மன்னனுக்கு வாரிசுகள் யாரும் இல்லாததால், அந்த மன்னனால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதே அவ் வழக்கம்.

அம் மன்னன் தான் இறந்த பின்னர், புதிய அரசனைத் தனது மந்திரி சபையினர் சில பரீட்சைகள் வைத்துத் தெரிவு செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட புதிய மன்னன் ஐந்து வருடங்கள் மாத்திரமே நாட்டை ஆட்சி செய்ய முடியும் என்றும், ஐந்து வருடங்களின் பின்னர் சந்திர நதிக்கு அடுத்துள்ள காட்டில் அவரைத் தன்னந்தனியாக, ஆயுதங்கள் எதுவுமின்றிக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும் எனவும், தனது மரண சாசனத்தில் குறிப்பிட்டிருந்தான்.

இவ் வழக்கத்தின் காரணமாக, தந்திரபுரியின் மன்னனாக வருவதற்கான பரீட்சைகளை எதிர்கொள்ள அநேகமானோர் மிகவும் அஞ்சினர். துணிவுடன் பரீட்சைகளை எதிர்கொண்டு வெற்றிபெற்றவர்களும் மன்னராகப் பதவி ஏற்ற சில நாட்களிலேயே, ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர், கொடிய விலங்குகள் நிறைந்த அடர்ந்த காட்டிலே ஆயுதங்கள் எதுவும் இன்றித் தன்னந்தனியாகத் தாம் விடப்படுவதை எண்ணி எண்ணியே நாட்களை அச்சத்தில் கழித்தனர்.

இவ்வாறு பல வருடங்கள் கடந்தன. மன்னர்களாக இருந்தவர்கள் அவர்களின் ஆட்சிக்காலத்தின் பின், காவலர்களால் படகில் ஏற்றிச் செல்லப்பட்டுக் காட்டில் விடப்பட்டுக்



காட்டு விலங்குகளுக்கு இரையானார்கள். தந்திரபுரியின் விசித்திர வழக்கமும் தொடர்ந்தது.



இறுதியாகப் பதவியில் இருந்த மன்னன் காட்டில் விடப்பட்டதும் அடுத்த மன்னர் தெரிவு தொடர்பான அறிவிப்பு மந்திரி சபையால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. இம் முறை அப் பரீட்சைகளில் அறிவன் என்ற துடிப்பு மிக்க இளைஞன், பங்கேற்று வெற்றி பெற்று மன்னனாக முடி சூடிக்கொண்டான். இதைப் பார்த்த பலரும், இன்னும் நிறையக் காலம் வாழ வேண்டிய இவ் இளைஞன் பதவி ஆசையால் இன்னும் ஐந்து வருடங்களில் கொடிய விலங்குகளுக்கு இரையாகி, இறந்து போகப்போகிறானே என்று வருந்தினர்.

காலம் உருண்டோடியது. வருடங்கள் கழிந்தன. மன்னனாக இருந்த அறிவனைக் காட்டில் கொண்டுபோய் விடவேண்டிய நாளும் வந்தது. அறிவனுடைய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பெரும் சோகத்தில் இருந்தனர். ஆனால், அறிவனோ கொஞ்சமும் கலக்கமின்றி தனது அன்றைய நாளுக்குரிய கடமைகளை நிறைவு செய்து பயணத்திற்குத் தயாரானான்.

ஆற்றங்கரைக்கு வந்த அனைவருக்கும் ஆச்சரியமும் வியப்பும் ஏற்பட்டது. சந்திர நதியின் மறு கரையில் அவர்கள் கண்ட காட்சியோ, அனைவரதும் வாய்கள் அவர்கள் அறியாமலே திறந்து ஆ... என ஓசையை எழச் செய்யும் வகையில் அமைந்திருந்தது.

ஆம்.

மறு கரையில் முன்னரைப்போல கொடிய மிருகங்கள் வாழும் அடர்ந்த காடு இருக்கவில்லை. அதற்குப் பதிலாக மிகவும் அழகிய கட்டடங்கள் கொண்ட நாடு ஒன்று உருவாகியிருந்தது. அதன் மக்களும் பிரதானிகளும் தமது மன்னரை வரவேற்க ஆற்றின் மறு கரையில் பெரும் விழா ஏற்பாடு செய்து கூடியிருந்தனர்.

அறிவன் தந்திரபுரியின் மன்னனாகப் பதவியேற்ற உடனே செய்த விடயம், படைத் தளபதிகளில் முதன்மையான ஒருவரின் தலைமையில் படைப் பிரிவொன்றை சந்திர நதிக்குமறுகரையில்இருந்தகொடியமிருகங்கள் வாழும் அடர்ந்த காட்டுக்குள் ஆயுதங்கள் சகிதம் அனுப்பி, அங்கிருந்த மிருகங்களை அப்பால் உள்ள இன்னொரு காட்டுக்கு விரட்டியடித்தான். பின்னர் மந்திரிகளில் திறமையான ஒருவரை வேலையாட்களுடன் அனுப்பி அக் காட்டினை மாற்றியமைத்து, அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் கூடிய அழகிய நாட்டை உருவாக்கினான். அவ்வாறு உருவாகிய நாட்டில் தந்திரபுரியில் வாழ்ந்துவந்த வீடு, நிலம் அற்ற மக்களைக் குடியேற்றினான். அம் மந்திரியையே அந் நாட்டின் முதலமைச்சராகவும் நியமித்தான்.

எனவே, தனது மீதமுள்ள ஆயுட்காலத்தை அந்தப் புதிய நாட்டின் மன்னனாக அறிவன் மகிழ்ச்சியுடன் களித்தான். ◻

# ஒற்றுமை

கவிதை

*கவிமேகம் காளமேகம்*

*அவர்கள் எல்லாரும்
ஒன்றைத்தான் சொல்லுகிறார்கள்
வேறு வேறு குரல்களிலும்
வேறு வேறு தொனிகளிலும்
வேறு வேறு வார்த்தைகளிலும்
அதனை சொல்லுகிறார்கள்
அவர்கள் தலைவர்கள்
பனம்பழத்தை அடித்துப் பிரிப்பது போல்...
ஒரு அடியில் மூன்றாயும் நாலாயும்
பிரிக்கும் வல்லமையும்
பிரிந்ததை புளியும் வல்லமையும்
புளிந்ததை உறிஞ்சும் வல்லமையும்
அவர்க்கு உண்டு
அவர்கள் பிரிப்பார்கள்
இவர்கள் பிரிவார்கள்
அவர்கள் பிழிவார்கள்
இவர்கள் தும்பாவார் – அல்லது
வெறும் சக்கையாவார்
சக்கையான பின்னாலும்
சும்மாய் இருக்கார்
மேலும் சிக்குப்பட்டு சிக்குப்பட்டு
சீரழிந்தே போவார்
மிஞ்சி இருப்போரும்
கடவுளின் பேராலே
அடியுண்ட தேங்காயாய்
சிதறுண்டு போவார் – இன்னுமின்னும்
சிதறுண்டு போவார்
இதுவே அவர்களின் விருப்பம்
ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
இது பழமொழி
இந்த தமிழர் பிரிந்துபட்டால் யாருக்கு கொண்டாட்டம்?
இவர்கள் எப்போதும் இப்பிடித்தான்
வேலிக் கதியாலுக்கும் வேப்பங் கொப்புக்கும்
மூலைப் படலைக்கும் முழுசாய் அடிபட்ட பரம்பரை
ஒற்றுமை என்று சொல்லி சொல்லி அவர்கள் பிரிப்பார்கள்
அதையே திருப்பி சொல்லி இவர்கள் பிரிவார்கள்
ஒற்றுமை மிக நல்லது தான்
ஆனால்...*



# பதில்

*எம்.ஏ. ஏ. சப்ரான்*



அலுப்பின் அதீதத்தில் அசந்து தூங்கிக் கொண்டிருந்த ஆசாத்தை தட்டி எழுப்பி விட்டாள் சித்திக்கா. முன்பெல்லாம் யாராவது எழுப்பினால் காட்டுக்கத்து கத்திவிட்டு மீண்டும் சுருண்ட படுத்துக் கொள்ளும் ஆசாத்துக்கு இப்போதெல்லாம் அவ்வாறு செய்யமுடியாத அளவு வயதுக்கு மீறிய பக்குவம் நிரம்பியிருந்தது. இது வயதின் முதிர்ச்சியா அல்லது குடும்பச் சூழல் பற்றிய தெளிவா என அவனுக்கே தெரியவில்லை. கண்ணைக் கசக்கியபடியே,

"என்னம்மா... சொல்லுங்க"

"இன்னக்கு அவருக்குப் பொறகு ராசிக் காக்கா சம்பந்தம் ஒண்டக் கூட்டிட்டு வாராரு. நீ வாச்சர்ர கடக்கி போயி மணிக்கூட்டு பெத்தியும், தேயிலையும் சீனியையும் கடனுக்கு வாங்கி வா" என்ற ஆசாத்தைக் கடைக்குப் போகச் சொன்னார்.

"ஏக்கனவே கொடுக்கவேண்டிய கடன் காசு இருக்கே... அதக்கேட்டா நான் என்ன செல்ல."

"உம்மா வந்து தருவான்னு சொல்லு."

நடப்பதை எல்லாம் ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் பர்வின். சித்திக்காவின் ஒரே மகள். ஒழுக்கமானவள். பெண்ணுக்கே உரிய அத்தனை அம்சங்களையும் கொண்டவள். காரிருளை வார்த்தெடுத்தால் போல அவளது நிறம். வாழ்வு தமக்கு பரிசளித்த வலிகளையும் ரணங்களையும், அவற்றின் நினைவுகளையும் அடிக்கடி அசைபோட்டுக் கொண்டிருந்தாள்.

தனது குடும்பத்தின் கடந்தகால நினைவுகளை நினைத்துப் பார்த்தாள். தந்தை ஸீபைர் இருக்கும் போது வயிறார பசியாறிய காலம். கேட்டபொருட்களை எல்லாம் இலை என்று சொல்லாது வாங்கித் தந்த எல்லையற்ற அன்பு. இவ்வாறு மகிழ்ச்சிகரமாக சென்ற வாழ்வு புயலில மாட்டிய படகு போல் ஆனது. மீன் பிடித் தொழிலில் ஈட்டிய வருமானத்தில்தான் இவர்களின் வாழ்க்கை எனும் வண்டி நகர்ந்தது. ஒருநாள் மீன் பிடிக்கச் சென்ற தந்தை வீடு திரும்பவில்லை. இறந்து விட்டாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா அல்லது எங்காவது தஞ்சம் அடைந்துள்ளாரா என்கின்ற எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. கண்ணீரும் கவலையும் இவர்களுடன் கைகோர்த்துக்கொண்டன. ஏழாம் தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த அவளது தம்பிதான் சுமக்கமுடியாத வயதில் குடும்பப் பாரத்தைச் சுமந்து கொண்டான். கல்வியை இடைநடுவே நிறுத்திவிட்டு, கூலிக்குப் பொருட்களை ஏற்றி இறக்கும் வேலைக்குச் சென்றான். இவ்வாறே நகர்கிறது இவர்களின் ஜீவனோபாயம்.

எப்போது வேண்டுமானாலும் விழுந்துவிடுவேன் என்ற நிலையிலிருந்த ஆணியை கல்லால் ஓங்கி அடித்துச் சரிசெய்துவிட்டு, சுவர்க்கடிகாரத்தில் கடைக்காரரிடம் கேட்டுவந்த நேரத்தை வைத்தான் ஆசாத்.

"இந்தாங்க நீங்க கேட்ட சாமான்கள்."

"அத குசினில வை."

தனது சகோதரியிடம் சென்று "மாப்புள வந்துடுவாங்க. ஒன்ன பொறப்புடட்டாம" என்று நக்கலாக சொல்லிவிட்டு நகர்ந்தான்.

தன்னிடமுள்ள ஆடைகளில் நல்ல ஒன்றை அணிந்துவிட்டு நல்ல வரனுக்காக பிரார்த்தித்தாள்.

"புள்ள புள்ள."

"வாங்க... வாங்க உக்காருங்க."

பாய்கள் விரிக்கப்பட்டு எல்லாமே ஆயத்தமாக இருந்தன.

ராசிக் காக்கா எல்லோரையும் அறிமுகப்படுத்தும் வேலையை ஆரம்பித்தார்.

"இதான் மாப்புளட உம்மா. இது மாப்புள... கணக்குப்புள்ள உத்தியோகம்... இது பொண்ணோட உம்மா...

"பொண்ண பாத்துட்டா நல்லது" என்று இழுத்தாள் மாப்பிள்ளையின் தாய்.

"இருங்க வரச்சொல்றன்" என்று கூறியபடியே குசினியை நோக்கி விரைந்து சென்றாள் சித்திக்கா.

"பர்வின்... பர்வின்... பிளேண்டிய ஊத்திட்டு கெதியா வா... ஒன்ன பாக்கணுமாம்."

"சரிம்மா" என்றவாறு பிளேண்டி தயாரிக்கச் சென்றாள். சுடவைத்த நீரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது வயது இருபத்தெட்டை எட்டிப் பிடித்துவிடும். பல மாப்பிளைகள் வந்து வந்து செல்வதும் இவர்களும் பிளேண்டி ஊற்றிக் கொடுப்பதும் வாடிக்கையான விடயங்களாக மாறிவிட்டன. இதுவரை வந்த எவரும் சரியான ஜோடியாக அமையவில்லை. இறுதியில் அவளை நிராகரிக்க முன்வைத்த காரணம் 'கறுப்பு'. எல்லா விடயங்களும் சரியாக இருந்தாலும் பெண் கறுப்பு எனக் காரணங்காட்டி தட்டிவிடுகின்றனர். இந்த விடயமே அவளின் நெஞ்சைப் புழுவாய் அடிக்கடி துளைக்கும்.

கரிக்கட்டி மாதிரி கறுப்பு நிறம்தான். அதற்கு அவள் என்ன செய்வாள். அது இயற்கையின் நியதி. இதை வைத்து நிராகரிப்பதுதான் அவளது மனதை வாட்டும் கவலையாக இருந்தது. இவற்றையெல்லாம் நினைத்தபடி தோணி சென்றபின் ஒன்றிணையும் நீர்த்தாவரம் போல நிகழ்காலத்துக்கு வந்தாள்.

"இந்தாங்க எடுங்க" என்ற அன்ப கலந்த குரலில் வந்திருந்த அனைவருக்கும் பிளேன்டி பரிமாறினாள்.

"பொண்ணுக்கு இந்த வீட்டயா கொடுக்கப் போறிங்க."

"ம்.. இதயே கொடுத்திர்ரம்"

"வீடு பரவால்ல. நாங்களும் ஏழ்மப்பட்ட குடும்பந்தான். அதால கூடயா எதிர்பார்க்கல.. பொறகு பதில் சொல்லி அனுப்புறன்" என்று மாப்புள்ளயின் தாய் கூறிவிட்டு அனைவரும் சென்றனர்.

வீட்டில் மயான அமைதி நிலவியது...

இந்த வரமாவது அமைந்துவிட வேண்டும் என மனதுக்குள் நினைத்துக்கொண்டார் சித்தக்கா. இருந்தாலும் மனதின் வலிகள் கனதி தாங்காமல் விழியோரமாய் கண்ணீராய் கசிந்தன. கண்ணீர் காட்டாறாய் பெருக்கெடுத்தது.

"அழாதம்மா... எல்லாம் சரியாகிவிடும்... இந்த மாப்பிள சரியா அமஞ்சிடும்மா..." என்று மகன் கூறித் தாயை ஆறுதல் படுத்த முனைந்தான்.

அமைதியை பர்வினின் முகம் பிரதிபலித்தாலும் மனதுக்குள் புயலே வீசிக்கொண்டிருந்தது. சோதனைகளின் போது ஒன்றை மட்டும் நினைவில் நிறுத்திக் கொள்வாள். 'நாம ஆணியை அடித்துவிட்டு பலமாக அடிக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்க்க ஆட்டிப் பார்ப்போமே. அதுபோன்று தான் இறைவன் எம்மை சோதிக்கின்றான் என்று. இந்த வரனாவது சரியாகுமா? இவரைப் பார்த்தால் நல்ல வராகத் தெரிகிறது. இருந்தாலும் என்னைத் திரு மணம் செய்து கொள்ள ஏற்றுக்கொள்வாரா? என் பிரார்த்தனைகளை இறைவன் அங்கீகரிப்பானா? என் நிறத்தை சுட்டிக்காட்டி இந்த வரனும் கைநழுவிப் போகுமா?' இப்படியான பல கேள்விகள் மனதில் ஊஞ்சலாடின. பூட்டிய அறையில் பேசினால் எதிரொலிக்கும் சத்தம் போல இந்தக் கேள்விகள் மனதிலே எதிரொலித்துக் கொண்டிருந்தன.

இந்த சமூகம் கறுப்பை ஒரு குறையாகவே பார்க்கிறது. வெள்ளை என்பதால் சலவை செய்து வெளுக்கபட்டது. கறுப்பு என்பதால் அழுக்கு என்று ஒதுக்கப்பட்டது என்று அர்த்தமல்ல. கறுப்பு என்பது அசிங்கமல்ல. அது ஒருவித அழகு. கறுப்பு என்பது பயங்கரம் அல்ல. அது ஒரு வர்ணம் தீட்டப்படாத ஓவியம். கறுப்பு என்பது அவமானம் அல்ல. அது ஒரு அடையாளம். அது குறை அல்ல. அது ஒரு நிறம். திருமணம் முடிக்க நிறம் அவசியமில்லை. நல்ல மனம் தான் தேவை என்று எப்போது இந்தச் சமூகம் புரிந்து கொள்ளப்போகிறது. நிறபேதம் பேசுகிறவர்களிடம் கொட்டித் தீர்க்க எத்தனையோ மனக்குமுறல்கள், ஆதங்கங்கள் இருந்தாலும் சமூகம் இட்ட வேலைகளைத் தாண்ட முடியாத இயலாமையை நினைத்து பர்வின் வருந்தினாள்.

இன்னும் காத்துக்கொண்டுதான் இருக்கிறாள் அவர்களின் பதிலுக்காக...

பயில்நிலம்

சிறுகதை

# வாய்ச்சொல்லின் வீரரடி



*எச்.என்.அஸீமா*

பேராசிரியர் பெருமாள் நாடறிந்த பேச்சாளர். அவர் மேடையிலே பேச எழுந்துவிட்டார் என்றால், தமிழ் அவர் நாவில் கொஞ்சிக் குதித்து விளையாடும். தமிழ் தென்றல் தவழ்ந்து வந்து கேட்போரை மெல்லென அணைத்துச சுகம் பேசும். புதிய புதிய உவமைகளுக்கு சின்னஞ்சிறு கதைகளையும் அவரிடத்துக் கைகட்டி சேவகஞ்செய்யும். இத்தனை உவமைகளையும் இத்தனை கதைகளையும் எங்கிருந்துதான் பெற்றுக்கொண்டாரோ எனக் கேட்போர் வியப்படைவர். அவர் பேச்சிலே நகைச்சுவை நடனமாடும்; வியப்பு விம்மிப் புடைத்தெழும்; கோபம் கொப்பளிக்கும்; உவகை உயிரோட்டமாய்த் துடிக்கும்.

இவற்றால் அவர் சொற்சிலம்பமாடிக் கேட்போர் மனத்தை மயக்குபவர் என்று மாத்திரம் எண்ணிவிடக் கூடாது. அவர் பேச்சிலே உன்னதமான கருத்துக்களே உயிர்நாடியாய் மிளிரும். அக்கருத்துக்களை அழகு தமிழால் ஒப்பனை செய்து கேட்போருக்கு ஊட்டி விடுவார். அரைத்த மாவை மீண்டும் அரைக்கும் நிலை அவரிடமில்லை; ஒரு கருத்தை இரண்டு மேடையிற் சொல்லத் தெரியாது அவருக்கு. அவர் ஏறிய மேடைகளோ எண்ணற்றவை. அத்தனை மேடைகளிலும் அவர் புதிய புதிய கருத்துக்களையே விதைத்திருக்கிறார்.

அரசியலில், நிருவாகத் துறையில், பொதுவாழ்வில் நிகழ்ந்த தில்லுமுல்லுகளையும் ஊழல்களையும் மேடையிலே அக்குவேர் ஆணிவேராகக் காட்டும் போது கேட்போர் மூக்கிலே விரலை வைப்பர்; அதனால் பெரும் பெரும் புள்ளிகளின் பகைமையைத் தேடிக் கொண்டவர்; அதற்காக அவர் என்றுமே வருந்தியதுமில்லை: அஞ்சியதுமில்லை.

காலங்காலமாகசமுதாயத்திலேஉழுத்துப்போன, ஆனால் புரையோடிக் கிடக்கும் மூடக் கொள்கையைப் பகுத்தறிவுக்குப் பொருத்தமான முறையிலே சாடுவார். அவரது புரட்சிகரமான சிந்தனைகளும் கருத்துக்களும் இளஞ் சந்ததியினரிடையே பெரும் வரவேற்பினைப் பெற்று இருந்தன. அதனால் அவரை அவர்கள் ஓர் இலட்சிய வாதியாகவும், உன்னத புருடராகவும் மதித்தனர்.

அன்று அகில இலங்கைத் தமிழ் மாதர் முன்னேற்ற மன்றத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம். பெண்கள் விடுதலைக்காய், அவர்கள் முன்னேற்றத்துக்காய், குரலெழுப்பிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, அவ்விழா நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அவ்வொழுங்குகளுக்கு மன்றச் செயலாளர் யாழினியின் அயராவூக்கமும் தளரா முயற்சியுமே காரணமாயமைந்தன. யாழினி பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் பெருமாளின் உத்தம மாணவியரில் ஒருத்தி. அவளுடைய அன்பும் பண்பும் பணிவும் செயலாற்றலும் பேராசிரியரைப் பெரிதுங் கவர்ந்தன.

அவ்வாறே யாழினியும் பேராசிரியரின் பேராற்றலிலும் இலட்சிய வேட்கையிலும் தன் மனத்தைப் பறிகொடுத்து இருந்தாள். அதனால், அந்த வெள்ளிவிழாவுக்குப் பிரதம அதிதியாகப் பேராசிரியர் பெருமாளை அழைத்து இருந்தாள். சுவரொட்டி விளம்பரங்களிலும் அழைப்பிதழ்களிலும் பேராசிரியரின் பெயர் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆனால், அன்று இளைய தலைமுறையினரான

ஆண்களும் பெண்களுமாக மண்டபம் நிறைந்து வழிந்தது. ஆங்காங்கே நரைத்த தலைகளும் சில தென்பட்டன.

விழாவின் ஆரம்பத்தில் நிகழும் சம்பிரதாயச் சடங்குகளான வரவேற்புரை, தலைமைப் பேருரை என்பன நிகழ்ந்த பின்னர், பேராசிரியர் பெருமாள் அவர்கள் பேச எழுந்தார். கரகோஷம் மண்டபத்தை அதிர்வித்து விண்முகட்டைத் தொட்டது. 'பெண்களும் சீதனக்கொடுமையும்' என்பதே அவர் பேச எடுத்துக் கொண்ட பொருள். சீதனக் கொடுமையால் இன்றைய தமிழ்ச் சமுதாயத்திலே பெண்கள் அடையும் இன்னல்களை அவர் எடுத்துரைத்தபோது, இளைஞர்கள் பலரின் கண்களிலே கண்ணீர் பனித்தது; இளம் பெண்களின் மனத்திலே மகிழ்வு துளிர்த்தது.

அவர் தம் பேச்சின் இறுதியிலே கூறிய சொற்கள் ஒவ்வொன்றும் கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்தன.

"அன்பர்களே, கேளுங்கள், இஃது என் உறுதியுரை, சத்திய வார்த்தை. எனக்கு இறைவனின் அருட்கொடையாக மூன்று புதல்வர்கள் உளர். அவர்களில் மூத்தவன் சமூகவியலிலே ஒரு விரிவுரையாளர். என்னைப் போலவே கொள்கைப் பற்று மிக்கவர். கலியாணச் சந்தையிலே விலைப் பொருளாக நிற்பவன். இன்றைய கலியாணச் சந்தை விலைப்படி பார்த்தால் குறைந்த படசம் ஒன்றரை கோடி பெறுமதி உள்ளவன். ஆனால், இவ்விடத்திலே ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒன்றரை கோடி பெறுமதியில அவனுக்காக ஒன்றரைச் சதங்கூட நான் சீதனமாய் வாங்கப் போவதில்லை: அவனும் அதை விரும்பமாட்டான். அன்பும் பண்பும் நல்லொழுக்கமும் நிறைந்த மங்கை நல்லாளை அவனுக்கு சீதனம் வாங்காமலேயே மணம் முடித்து வைப்பேன். அந்த மணவிழாவிற்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு இப்பொழுதே உங்களை வேண்டிக் கொள்கிறேன்."

அவர் சொற்பொழிவு நிறைவுற்றதும், அங்கு எழுந்த கரகோஷமும் மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்கச் சில நிமிடங்கள் சென்றன.

"ஐயா வணக்கம்."

"யார் நீங்கள்?"

"நான் யாழினியின் தந்தை."

"ஓ! யாழினியின் தந்தையா? சுந்தரமூர்த்தியா? கேள்விப்பட்டதுண்டு. இன்றுதான் சந்தித்து இருக்கிறேன். வாருங்கள்; வாருங்கள்."

பேராசிரியர் பெருமாள் சுந்தரமூர்த்தியை வரவேற்று உபசரிக்கிறார்.

"எனக்கு யாரிடமும் முகமன் வார்த்தை பேசத் தெரியாது. உண்மையாகவே சொல்லுகிறேன்; யாழினியைப் போன்ற ஒரு பெண்ணைப் பெற நீங்கள் முற்பிறப்பிலே பெருந்தவஞ் செய்திருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்கு யாழினிதான் வரைவிலக்கணம்."

பேராசிரியர் உணர்ச்சிப் பெருக்கோடு இவ்வாறு உரைக்கிறார். சுந்தரமூர்த்தி மெல்லச் சிரிக்கிறார். அவர் சிரிப்பிலே சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது.

"அன்று மாதர் முன்னேற்ற மன்ற வெள்ளி விழாவிலே ஆற்றிய சொற்பொழிவு. அதை இப்பொழுது நினைத்தாலும் என் மெய் சிலிர்க்கிறது. அந்தப் பேச்சின் இறுதிப் பகுதி இருக்கிறதே... அது தான்."

சுந்தரமூர்த்தி வார்த்தைகளை முடிக்கவில்லை. பேராசிரியர் குறுக்கிட்டார்: "ஏன்? அதிலே உங்களுக்குச் சந்தோசமா?"

"உள்ளத்தில் காண்பது அரிதிலும் அரிது...ம் உங்களுக்கு யாழினியைத் தெரியும். ஆனால், எங்கள் குடும்ப நிலை தெரியாது. அவளுக்கு நானும் அவள் கல்வியும் குணமும்தான் சொத்துக்கள்."

"ஏன் கவலைப்படுகிறீர்; யாழினியின் படிப்புக்கும் குணத்துக்கும் அழகுக்கும் பலபேர் போட்டி போட்டுக்கொண்டு வருவார்களே."

சுந்தரமூர்த்தி விரக்தியோடு சிரிக்கிறார் "அவற்றுக்குப் போட்டி போட்டுக்கொண்டு எவரும் வரவில்லை;சீதனத்துக்குத்தான்போட்டிபோடுகிறார்கள். அதனால்தான் உயர்ந்த கொள்கையுள்ள உங்களிடம்..."

அவர் வார்த்தைகளை முடிக்க வில்லை.

"மாப்பிள்ளை கேட்டு வந்தீராக்கும்?" பேராசிரியர் கோபமாய் கேட்கிறார். பின்னர் சிறிது தணிந்து, "ஆனால் என் மனைவி இருக்கிறாளே. அவளையும் அனுசரித்துப் போக வேண்டும். இந்தக் கடன் சுமையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள் என்று கேட்கிறாள். நான் என்ன செய்வது?..."

"மகன்மாருக்கு சீதனம் வாங்கிக் கலியாணம் செய்யவேண்டியதுதான்!" என்று உரக்கச் சிரித்துக் கூறுகிறார்.

சுந்தரமூர்த்தி, "வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே. வாய்ச்சொல்லில் வீரரடி" என்று முணுமுணுத்துக் கொண்டே புறப்படுகிறார்.




# 'இரு இனத் தேசியங்களில் விடுதலைத் தேசியம்'

பி. முத்துலிங்கம்

**19.07.2025,20.07.2025 தினங்களில் மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த கலாநிதி ந. இரவீந்திரனின் 18 நூல்கள் 15 ஆய்வாளர்கள் கலந்துகொண்ட ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை**




தோழமையுள்ள கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களின் இந்நூலை ஆய்வுசெய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் சர்வதேச அரசியல், பொதுவுடைமை வாத அரசியல் விஞ்ஞானப் போக்கு குறித்து ஆய்வு செய்கின்ற நல்லாசானாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இந்நூல் விடுதலைத் தேசியம் தொடர்பாகப் பேசுகின்றது. வரலாற்றில் விடுதலை வேதாகமம், விடுதலை இராணுவம், மக்கள் இராணுவம் போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அந்த வகையில் 'விடுதலைத் தேசியம்' எனும் பதத்தை உருவாக்குவதில் பேராசிரியர் க. கைலாசபதி பெரும் பங்கு வகித்ததாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் வைத்திருந்த உறவின் பேரில் 'தொழிலாளி' பின்னாளில் 'செம்பதாகை' ஆகிய பத்திரிகைகளில் உள் விவகாரங்கள் பற்றி எழுதிய கட்டுரைகளில் 'தேசியம்' தொடர்பாக எழுதியதாகக் குறிப்பிடப்படுகின்றது.

1956 தொடக்கம் 1959 வரை பண்டாரநாயக்கவின் காலத்திலும், 1960 தொடக்கம் 1964 வரை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சிங்கள தேசிய வாதம் எழுச்சி பெற்றது. இது விடுதலைத் தேசியத்தை நோக்கிய பயணமா? இக் காலப்பகுதியிலே தமிழரசுக் கட்சி கூட்டாட்சியை இலட்சியாமாகக் கொண்டு தனது போராட்டங்களை முன்னெடுத்தமை குறிப்பிடத் தக்கது. நூலாசிரியர் 1970 தொடக்கம் 1977 வரை நடைபெற்ற கூட்டு அரசாங்க ஆட்சிக்காலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். ஏனெனில் உற்பத்திப் பொருளாதாரம், புதிய கல்வி முறை, குடியரசு அரசியல் யாப்பு, பெருந்தோட்டங்கள் தேசிய மயமாக்கல் போன்றவற்றின் ஊடாக நாடு முன்னோக்கி கொண்டுசெல்லப்பட்டமையாகும். ஆனால் இவ்வாட்சியின் மறு பக்கத்தைப் பார்க்கும்போது, இனப் பிரச்சினையைச் சரி யாகஅணுகவில்லை. உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வன் முறை, தமிழையும் அரச கரும மொழியாக்கியமை, தரப்படுத்தல் போன்ற காரணங்களால் இளைஞர்கள் தமிழ்த் தேசியத்தை நோக்கிச் சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டரசாங்கம் தொடராமைக்குப் புறநிலையாகத் தீவிரவாத இடதுசாரிக் கட்சிகளின் தொழிற்சங்கப் போராட்டம் ஒரு காரணம் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் இதற்கான அடிப்படைக் காரணம் அக நிலையானதாகும். சிங்கள தேசியவாத முதலாளித்துவத்தோடு, இடதுசாரிகளால் ஒரு கட்டத்திற்கு மேல் கூட்டுச் சேர்ந்து செயற்பட முடியாமையே முரண்பாடுகளுக்கும், பிளவிற்கும், வீழ்ச்சிக்கும் காரணம் என்பது எனது கருத்தாகும்.

வரலாறுகளிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி பாடத்தைக் கற்றுக்கொண்டது. அதனாலேயே அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன முதலாளித்துவக் கட்சிகள் என நிராகரித்தார்கள். லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன பாராளுமன்ற ஜனநாயக சீர்திருத்தவாத கட்சிகள் என நிராகரித்தார்கள்.

எமது நாட்டில் பழைய இடதுசாரிகளின் முழுமையான தோல்விக்கான காரணம் அவர்கள் சிங்கள தேசியவாத முதலாளித்துவத்தோடு சேர்ந்து கூட்டரசாங்கம் அமைத்தமையே என்பதைப் பின்னாளில் அவர்களே உணர்ந்தார்கள்.

இந்த வரலாறுகளிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி பாடத்தைக் கற்றுக்கொண்டது. அதனாலேயே அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன முதலாளித்துவக் கட்சிகள் என நிராகரித்தார்கள். லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன பாராளுமன்ற ஜனநாயக சீர்திருத்தவாத கட்சிகள் என நிராகரித்தார்கள். நூலாசிரியர் ம. வி. முன்னணியினர் வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை ஒரு பொருட்டாக எடுப்பதில்லை என்கின்றார். ஆனால் அவர்கள் பாடங்களைக் கற்ற பின்னர் அவை பற்றி திரும்ப, திரும்ப பேசுவது அர்த்தமற்றது தானே.

தமிழ்த் தேசியவாத மேலாதிக்க முதலாளித்துவம் வீழ்ச்சியுற விடுதலை இயக்கங்கள் உருவாகின. அவற்றில் PLOTE, EROS, EPRLF போன்றவை தமது முற்போக்கான அரசியல் தேடல்கள் மூலம் தேசியம், தேசிய இனம், சுயநிர்ணயம் கோட்பாடுகளைப் பிரபலமாக்கியதாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். 1986, 1987ம் ஆண்டுகளில் LTTE அமைப்பும் கூட சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ மற்றும் மார்க்ஸிஸ, லெனினிச நூல்களைக் கொள்வனவு செய்து தமது உறுப்பினர்களுக்கு வழங்கியதாக நான் அறிந்திருக்கின்றேன். ஆசிரியர் குறிப்பிடுவது போல LTTE இயக்கம் தமது மேலாதிக்க, இராணுவ வாத, பயங்கரவாத செயற்பாடுகளால் தமிழ் மக்களின் வாழ்வியலையும், விடுதலையையும் பின்னோக்கி கொண்டு சென்றது என்பது உண்மை. ஆனால் LTTE ஏகாதிபத்தியம் சார் அமைப்பு என்பது ஆய்வுக்குரியது.

நூலாசிரியர் இரண்டாம் சுதந்திரம் பற்றிப் பேசியிருக்கின்றார். 2009 போர் வெற்றியை மகிந்த ராஜபக்ஸ இரண்டாம் சுதந்திரம் என்றார். ஆனால் போர் வெற்றியின் பின்னர் நிரந்தரச் சமாதானமோ, பொருளாதாரச் செழிப்போ ஏற்படவில்லை. எனவே இது இரண்டாம் சுதந்திரம் அல்ல. தேசிய மக்கள் சக்தி 2024 செப்ரெம்பர் ஆட்சிக்கு வந்தமை இரண்டாம் சுதந்திரம் என நூலாசிரியர் ஆதங்கப்படுகின்றார். மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகளின் பின்னரே அவர்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. கடந்த பத்து ஆண்டுகளின் தாங்கள் விட்ட தவறுகளைத் திருத்தி, தேசிய மக்கள் சக்தியை உருவாக்கியமையும், பாரம்பரிய முதலாளித்துவக் கட்சிகள் ஊழல், மோசடிகளால் நாட்டை வங்குரோத்தாக்கி, அவை பலவீனம் அடைந்தமையுமே ம. வி. முன்னணி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு காரணங்களாயின. தே.ம. சக்தி அரசாங்கம் புதிய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதிலும், இன நல்லிணக்கத்தின் மூலம் தீர்வினைக் காண்பதிலுமே அதன் வெற்றி தங்கியுள்ளது என்பது ஆசிரியரின் எதிர்பார்ப்பாகும்.

இறுதியாக மலையகம் பற்றி ஆசிரியரின் பார்வையை நோக்குவோம். இவர் அங்கு ஆசிரியராகவும், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் கடமையாற்றியபடி புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளராகவும் இருந்தார். அவ் வேளையில் மலையகத்தின் விடுதலைக்காப் பல அமைப்புக்கள் உருவாகின. அவற்றின் வழிகாட்டிகளாக அதிபர்கள் இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் விளங்கினார்கள். அவர்களின் மாணவரான திரு. வ. செல்வராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பட்டதாரியாவார். இவர் பின்னாளில் கவர்ச்சிகரமான தமிழ் மொழிப்பாட ஆசிரியராக மிளிர்ந்தார். மலையகத்தில் வாழும் 95% பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம், கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட 'வ.செ' என்ற ஆளுமையைக் கண்டறிந்து ஊக்கமளித்தவர் நூலாசிரியர் ந. இரவீந்திரன் அவர்களே. இவ்வாறாக விடுதலைத் தேசியம், மக்கள் இலக்கியம் என்பவற்றின் முன்னோடியான பேராசிரியர் க. கைலாசபதி முதல் மலையக விடுதலைச் செயற்பாட்டாளர் ஆசிரியர் வ. செல்வராஜா வரை இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பயில் நிலம்

சிறுகதை

# 'சிறகொடிக்கும் பறவையினம்

*சிவகுமாரன் சரவணன்*



பெண் என்றால் பேயும் இரங்கும் என்பர். பெண் இன்று பெண்ணாகவும் இல்லை. பெண்ணைப் பெண்ணாகப் பார்ப்போரும் இல்லை. பிரியமுடன் பார்க்கும் தாயைப்போல் மற்றய பெண்களையும் தாயாகவோ?, மகளாகவோ பார்ப்போரில்லை. இச்சை வலை வீசி விரித்து காத்திருக்கும் அத்தனை ஆடவர் மத்தியில் பெண் தன் வாழ்வை நிர்ணயிப்பது என்பது பெரிய சவால். இருந்தாலும் அவளும் தன்னுணர்வைப் பிரதிபலிக்க முடியாமல் வாடுகிறாள்.

தன்மானம் கௌரவத்துடன் வாழ ஆசைப்படும் ஒவ்வொரு நங்கையையும் இச்சை என்ற காற்றடித்து தன் மாயமான காம வலையில் சிக்க வைத்து அனுபவித்துக் கொள்ளும் ஒவ்வொரு துயரமான சம்பவமும் சமுதாயத்தை என்றும் திரும்பிப் பார்க்கச் செய்கிறது.

கல்பனா நல்ல சிவப்பு. மெல்லியவள். ஒற்றை நாடித் தேகம். சேலை உடுத்தால் தடியைக் கொடி சுற்றியது போல் உருவத்தாள். நல்ல சிவந்த உதடு. அனைவரையும் கவர்ந்திழுப்பவள். பார்வையில் கண் தனியழகு. கருநிற இமை. சிரித்தாள் என்றால் அது அப்படி ஒரு அழகு. அத்தனையும் பொருந்திய பெண்.

சுமாராக அவளையும் எல்லோரும் விரும்பியது உண்டு. பலர் ரசித்தார்கள். எல்லோரும் பெரும்பாலும் சைட் அடிப்பார்கள். இருந்தாலும் அவள் கொஞ்சம் கம்பீரமானவள். உணர்வுக்குள் தன்னை பெரும்பாலும் அமிழ்த்திவிடமாட்டாள்.

யாழ். இந்து மகளீர் கல்லூரியில் உயர்தரம் படித்து கணிதத்துறையில் 2ஏ பி எடுத்து பேராதனை பல்கலைக்கழகத்தில் தெரிவு செய்யப்பட்டாள்.

அவள் சுதந்திரமாகவும் விரும்பியவாறும் ஆடை அணிய நினைத்தாள். அவர்கள் இணுவில் நல்ல சைவ கோத்திர கலாசார குடும்பம். ஆகையால் தந்தை சில கவர்ச்சிகரமான ஆடைகளை அணிய விடமாட்டார். உடல் தெரிய ஆடை அணியும் பெண்கள் கொண்ட இடத்தில் இவள் கம்பீரமாக வாழ்ந்தாள்.

அவள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்டாள். அவள் அங்கு துடிப்பும் விவேகமும் மிக்கவளாய் எல்லோரையும் வசீகரப்படுத்தியிருந்தாள்.

சில காலங்களில் அங்கு ஒரு மட்டக்களப்பைச் சேர்ந்த நவீன் என்ற ஆடவன். அவன் கண்டதை யெல்லாம் தனக்கு என்று ஆசைப்படுபவன். அவன் கல்லூரி காலங்களில் பல மாணவிகளை காதலித்து ஏமாற்றியவன். அவனும் நல்ல கட்டழகன். கொஞ்சம்

கணக்கான உடம்பு. வார்த்தையால் கதைத்து பெண்களை வலை வீசிப்பிடிப்பவன்.

இரவும் பகலும் வட்ஸ்அப் ஒரே மெசேச்தான். நல்ல அழகான பெண்களின் நம்பரிற்கு அவனுடைய மெசேச்சே பெரிய தொல்லை. அவர்களைச் சீண்டுவதே அவனது வேலை. அப்படியான வெறியனின் கண்ணில் இவள் பட்டுவிட்டாள்.

பெரும்பாலும் அவளிற்கு அருகில் இருப்பான். அவளின் பெயரை தனது கையில் எழுதிக் கொள்வான். ஸ்ரேஸ் எல்லாம் வட்ஸ்அப்பில் அவளிற்கு மைச்சாத்தான் போடுவான்.

இப்படி பலகாலம் கஸ்ரப்பட்டு ஒருமாதிரி வலை வீசி இந்த தங்க புள்ளிமானைப் பிடித்து விட்டான். அவளிற்கு தெரியும் அவனிற்கு ஏற்கனவே ஒரு காதலி ஊரிலே இருந்ததும். இருந்தாலும் அவளது பருவ உணர்வைத் தூண்டியது. காதல் அரும்பியது. இரவும் பகலும் அதே நினைவு. அவனையே காதலனாகப் பார்த்தாள். கோவிலில் எல்லாம் அவனிற்காக கூட வழிபட்டாள்.

வீட்டை நினைத்து பலத்த பயம் அடி நெஞ்சில் இருந்தாலும் வயதும் பருவமும் அவளின் கண்ணை மறைத்தது. பேச்சுத் துணைக்கும், இளமையில் தனிமையைத் தடுக்கவும் இந்தப் பறவை காதல் கடலில் மூழ்கியது. வாழ்க்கை இதுதான் என்று தீர்மானித்தாள். இப்படியே ஆசையில் நீந்துவாள், கனவில் மிதந்தாள்.

காலங்களில் அவனது நினைவு உருட்டி உருட்டி பேராசையாக மாற்றி எடுத்தது. அன்பு, நம்பிக்கையை ஆதாரப்படுத்தி, இருவரும் ஒருவரை ஒருவர் இரசித்தும், காதலித்தும் வாழப் பழகினர்.

அவள் கலாசாரமாகவும் கட்டுப்பாடாகவும் வாழ்ந்தவள். ஆயிரம் ஆயிரம் ஆசையை வைத்துக் கொண்ட கன்னியவள், கல்லு வைத்த கோவில் எல்லாம் கைகூப்பி வரம் இருந்தாள். எல்லா விரதமும்ஒன்று சேரப் பிடித்தாள். கோவில் எல்லாம் அடிமேல் அடிவைத்து ஆலயம் சுற்றி வந்தாள். வீட்டுக்காரரின் மனம் மாறவும் பிரார்த்தித்தாள்.

இப்படியே காதலித்த நாட்கள் மிகவும் விமர்சையாகவும் பேரூந்துகளிலும் பூங்காக்களிலும் இருவரும் செல்வதும் காலத்தைக் கழிப்பதாக காலங்கள் பல உருண்டோடின.

இப்படியே இருந்த வேளையில் அடுத்த வருட அவர்களது யூனியர்கள் வந்தார்கள். அதிலும் ஒரு பெண் மீது இவன் கண் வைத்தான்.

அப்படியே கொஞ்சம் அவன் நடையை மாற்றுவதை அவதானித்தாள். தன் வெறுப்பை அவள் வெளிக்காட்டினால் தனது மன உணர்வை வெளிக்காட்டினாள். ஆசைகளை எடுத்துக்கூறினால் அவளது அன்பை அவன் ஏமாற்றினான். அவளால் அந்த தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாதவளானாள். சிற்சில புகைப்படங்கள் அவர்கள் இருவரும் எடுத்தார்கள். அவனும் யூனியர் பிள்ளை அக்ஷாவும் ஒரே மாவட்டம். எப்போதும் வெள்ளி மாலை நேரம் வீட்டிற்கு ஒன்றாகப் பயணிப்பர். இதை எல்லாம் இழந்து அவளது வாழ்வு "ஊமை கண்ட கனவுபோல" அமைந்தது. அவள் அவனது நினைவுகளில் மட்டுமே வாழ்வாக மாற்றினாள்.

மேலும் பல விடயங்கள் அவளது உள்ளத்தை உலுக்கியது. அதனால் அவள் அவனை விட்டுச் சற்று விலகினாள். இருந்தாலும் அவன் கல்பனாவுடன் எந்தவித தவறு தான் செய்யாதவனாகவே நடந்தான். அவன் சற்று கல்பனாவுடன் முந்தைய விடநெருக்கமாக இருப்பதும் சிலவேளைகளில் அனுபவிக்க துடிக்கின்ற மனநிலையை வெளிக்காட்டவும் செயதான். அவள் சற்றும் உரையாடவே இச் செயற்பாட்டை காணாதவளாக இருந்தாள்.

அவளது திறந்த நல்ல மனவியல்பும் வெகுளித் தன்மையும் அவளைக் காப்பாற்றியது. அவள் தனது உணர்வை தன் அறிவிற்கு உட்படுத்தினாள். இதனால் இந்த ஆவேச நிலையிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் அவனை வெறுத்தது மட்டுமன்றி தனது வாழ்க்கையையும் வெறுத்தாள். அவள் கல்வி மீது மட்டும் அக்கறை கொண்டாள்.

பெற்றோரும் பிள்ளையைக் கொஞ்சம் அவதானித்தனர். அவளது சோகம், துடிப்பில்லாமை இது எல்லாம் அவர்களுக்குள் ஒரே கேள்வியை எழுப்பியது. இருந்தாலும் எதையுமே காட்டிக் கொள்ளாது இருந்தாள். அவளது மனத்துணிச்சல் நினைவுகளோடு காலம் கழித்தாள். அவள் தன் அன்பை விட்டாள். தனக்குள்ளே அனுதினமும் அழுதாள். உள்ளம் முழுவதும் இருண்ட மேகமாக மாறியது.

அவள் எல்லா ஆண்களும் இப்படித்தான் என்ற முடிவிற்கு வந்தாள். தன் இனத்தையே வேட்டையாடும் இனம் உண்டா? அவள் காலம் முழுவதும் கன்னியாக மாறிவிட முடிவெடுத்தாள். எந்த ஒரு இனமும் முழு மரியாதையுடன் பிறர் உணர்வை கௌரவித்தது. ஆனால் இவ்வினம் தான் பறக்கும் உணர்வு கொண்ட பறவையின் இறக்கையைத் துண்டித்தது. □

மூத்தோர் படையல்

சிறுகதை

# மனிதமாடு

*அ. செ. முருகானந்தம்*



அவனுக்கு எழுபத்தைந்து வயது இருக்கும். எனது பாட்டனாரின் வயசு. அவருக்குள்ள கூன் முதுகு, வெண்தலை, ஒல்லித்தேகம், தளர்ச்சி எல்லாம் அவனிடமும் காணப்பட்டன. தெருவோரமாக ஒரு வயதுபோன பூவரசின் கீழ் 'ரிக்சோ'வும் கையுமாக நின்றான். தெருவில் போகும் 'மகாராஜா'க்களின் வண்டிகளும் வாகனங்களும் கிளப்பிய புழுதியைக் குடித்துக்கொண்டு, வருகிறவர் போகிறவர்களின் முகத்தை அண்ணாந்து பார்த்தபடி அவன் நின்றான்.

தெருவோரம் போய்க்கொண்டிருந்தேன். கிழவனின் ஒளி மங்கிய கண்கள் என்னையும் தப்பவிடவில்லை. எனக்கும் ஒரு ஆவர்த்தனம் அழுது வைத்தான். "சாமி, ஏறுங்க சாமி. உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும் சாமி. பிள்ளை குட்டிகள் இரண்டு நாளாகப் பட்டினி சாமி, நீங்கள் எல்லாம் இப்படி நடக்க ஆரம்பித்தால் நாங்கள் போகும் கதி என்னவோ சாமி?"

எனக்கு வயசு இருபது. அவனுக்கு எழுபத்தைந்து.

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். படம் ஆரம்பிக்க இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. மூன்று மைல் போக வேண்டும். நடந்து போவது என்றால் முடியாத காரியம்.

"சரி, சினிமாக் கொட்டகைக்குப் போக என்ன கேட்கிறாய்?"

ஒட்டி உலர்ந்த அவன் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாயிற்று. "ஐயோ சாமி! உங்களிடம் எல்லாம் கூலி பேசுவதா? புண்ணியவான்கள் மனமிரங்கி ஏதோ கொடுத்ததை வாங்குகிறேன்..."

அவனுடைய வயதில் பாதி அந்த வண்டிக்கும் இருக்கும். அப்பழுக்கற்ற முதல்தர கர்நாடகம். ஆனால் எனக்கு, இருபது வயசுக் குமரனுக்கு மூன்று மைல் நடந்து போவதற்கு இந்த கிழட்டுக் கர்நாடக ஜோடியின் உதவிதானே வேண்டியிருந்தது!

இரண்டு நாளாகப் பட்டினி கிடந்த குடுகுடு கிழவன் மேல் அவனுடைய வலியிழந்த தேகத்தில் 'ரிக்ஷோ' ஏறியது. ரிக்ஷோவின் மேல் நான் ஏறினேன். கலப்பையில் பூட்டிய மாடுபோல அவன் ஒடுங்கிநின்றான். சவாரி ஆரம்பமாயிற்று. ஆகா! எத்தனை உல்லாசத்தோடு, பெருமிதத்தோடு உட்கார்ந்திருந்தேன் அப்போது. ஆமாம், அந்த எழுபத்தைந்து வயதுக் கிழவன்மேல்!

பட்டினிக் களை; வீட்டில் அவனுடைய அன்றைய சம்பாத்தியத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் நாலைந்து

ஏழைச் சீவன்களைப் பற்றிய கவலை. நான் என்ன கொடுப்பேனோ என்ற ஏக்கம்– எல்லாம் சேர்ந்து கிழவனுக்குப் பெரும் யோசனையையும் சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும். வண்டி மெள்ளமாக ஊர்ந்து சென்றது.

"ஆமாம், இந்த ஞானோதயம் எல்லாம் அப்போது எங்கே போயிருந்தனவோ? அடடா எவ்வளவு குரூரப் பிராணியாக, ஈவு இரக்கமற்ற மிருகமாக மாறியிருந்தேன் அன்றைக்கு!"

மாட்டுக்கும் 'மெஷினு'க்கும் விலகி விலகி மனித வண்டி போய்க்கொண்டிருந்தது. குறுக்கும் மறுக்குமாக ஓடித்திரியும் இயந்திர பூதங்களுக்கூடாக– அந்த உணர்வற்ற சடலங்களில் ஒன்றாக மனிதன், பகுத்தறிவுள்ள மனிதன்– நாகரிகமடைந்த மனிதன்– 'பெறற்கரிய மனிதப்பிறவி' போய்க்கொண்டிருந்தது. சவாரி சுகப்படவில்லை. வயது போன கிழட்டு மாடு ஊர்ந்து ஊர்ந்து போயிற்று. அக்கம் பக்கத்தில் எல்லாம் வேகம் வேகமாகப் பறந்துகொண்டிருந்தன. போகும்போது என்மேல், என் வண்டியின்மேல் ஒரு ஏளனப் புன்னகை. ஐயோ, என்மானம் போயிற்று! இரண்டு மைல் கடந்து வந்துவிட்டோம்.

"என்னப்பா, வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப்போகிறது!" என்றேன் சற்று உரமாக. கோபமும் ஏளனமும் கலந்த இந்த அதிகாரத் தொனியில் அந்த மனிதன் எவ்வளவு மிரண்டு போய்விட்டான்! நாகரிகத்தையும் கொஞ்சம் நகைச்சுவையையும் அனுசரித்து இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டேன். 'எவ்வளவு விபரீதமாக முடிந்துவிட்டது!'

மனிதனுக்குக் கழிவிரக்கம், பச்சாதாபம் எல்லாம் அவன் அதர்மத்தின் ஒரு எல்லையைத் தாண்டிய பிறகுதான்!

தலையைக் கீழே போட்டுக்கொண்டு தனது எலும்புக் கோவையினால் சுமார் 'இருநூறு இறாத்தல்' பாரத்தை இழுத்துக்கொண்டு ஓடிய கிழவன் நான் சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டுப்போய்த் திரும்பிப் பார்த்தான்.

அந்த முகம்தான் அச்சமயம் எப்படி மாறிவிட்டது! எவ்வளவு கெஞ்சிற்று! எனக்கு அப்போதுதான் அறிவு வந்ததா? 'ரிக்ஷோ'வை விட்டுக் குதித்து ஓடிப்போய் அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டேனா? அல்லது அவனைத் தூக்கி 'ரிக்ஷோ'வில் வைத்து என்தேகம் ஓடியும்படி இழுத்துக்கொண்டு ஓடினேனோ? கற்தூணைப் போல் அசையாமல் இருந்தேன்.

அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சோறு கொடுக்கும் 'ரிக்ஷோ'வைப் பறி இழிவாகக் கூறியது கிழவன் மனத்தில் 'சுருக்'கென்று தைத்துவிட்டது. அந்த ரோசத்துடன் நான் எங்கே இடையில் இறங்கிப் போய்விடுகிறேனோ என்ற அச்சமும் சேர்ந்து கொண்டது.

வண்டி ஒருதரம் குலுங்கி எழுந்தது. அடுத்தகணம் மாயாசக்தி பெற்று அது பறக்கத் தொடங்கிற்று. எழுபத்தைந்து வயசுக் கிழவனுக்கு இந்த ஆவேசம் திடீரென்று எங்கிருந்து வந்துவிட்டது? தூக்கிய கால்கள் நிலத்தில் படாமல் விலா எலும்புகள் வெளியே தெறித்துவிடும் போல் இரைக்க இரைக்கத் தலையும் காலும் ஒன்றாகக் கூனிக்குறுக, மனுஷன் தாவித்தாவி ஓடத் தொடங்கிவிட்டான். தெருவில் போகும் 'சோடி' வண்டிக்காரர்கள் கிழவனையும் 'ரிக்ஷோ'வயும் பார்த்துப் பிரமித்துப் போனார்கள்.

எழுபத்தைந்து வயசுக் கிழம். இருநூறு இறாத்தல் பாரத்தோடு அடடா, என்ன ஓட்டம் ஓடுகிறது! அந்தச் சமயம் கிழவனை என்னவோ ஒன்று ஆட்டிவைத்தது. அவன் தன் உயிரை வெறுத்து ஓடினான். கிழவனும் 'ரிக்ஷோ'வும் நானும் அடுத்த நிமிஷம் சுக்குநூறாகப் போய் விடக்கூடும். ஆனால், இவை ஒன்றுக்கும் நான் தயாராகவில்லை. சினிமா பார்க்க வேண்டுமே! மனதில் கலவரம் தொட்டுவிட்டது. தன்னை மறந்து தொழில் செய்யும் கிழவனைப் பார்த்து, "என்னப்பாட! வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப் போகிறது!" என்று கூறிய அதே திருவாயினால், "கொஞ்சம் நிதானமாகப் போ அப்பா" என்றேன்.

நேரத்துக்கொரு குணம், சமயத்துக்கொரு பேச்சு, இப்படியாக நான் மாறிக்கொண்டிருந்தேனா? ஆனால், கிழவனோ மகா ரோசக்காரன்; பிடிவாதக்காரன்; எடுத்த காரியத்தை எப்படியும் முடித்துவிடும் மனத்திடமுள்ளவன். நான் கூறியதைக் கொஞ்சமும் மனதில் போட்டுக்கொள்ளாமல் நான் ஆரம்பித்த அதே வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தான். படம் ஆரம்பிக்க கால்மணி இருக்க என்னை அங்கு கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான்.

'ரிக்ஷோ'வில் இருந்து இறங்கிச் சட்டைப்பையிலிருந்து கால் ரூபாவை எடுத்து அவன் கையில் வைத்தேன். ரிக்ஷோவின் கைப்பிடிகளைப் பிடித்துப் பிடித்து மரத்துப் போன அந்தக் கைளை ஒன்றன்மேல் ஒன்று வைத்து குருக்களிடம் விபூதிப் பிரசாதம் வாங்குவது போல, மரியாதையாக வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு திரும்பினான். புகைப்படலம் எழும்புவதற்கும், எச்சில் துப்புவதற்குமாக ஒரு ரூபாவரை மேலதிகமாகப் பையில் கிடந்தது. உயிரும் உடலும் தேய்ந்துபோக என்னைச் சுமந்து வந்த கிழவனுக்குக் கால் ரூபாவிற்கு மேல் கொடுப்பதற்கு

இந்த மனம் இசையவில்லை. அவன் திரும்பிப் போகும் போது பார்த்தேன். சுகமாக மூச்சுவிடக்கூட முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். ஓர் அடிகூட எடுத்து வைக்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான். இவற்றையெல்லாம் பார்த்து ரசிப்பதற்கு அவகாசம் ஏது?

தியேட்டரில் மணி அடித்தது.

ஒரு ரூபா கொடுத்து உள்ளேபோய்க் கதிரையில் உட்கார்ந்து கனவு காண ஆரம்பித்தேன். மூன்று நாலு மணி நேரம் நீடித்த கனவு! 'ரிக்ஷோ'வையும் கிழவனையும் ஏன் வெளியுலகத்தையுமே மறந்து கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்துவிட்டு இரவு சுமார் பத்து மணியளவில் நிஜ உலகத்துக்கு வெளியேறித் தெருவழியே திரும்பி வந்து கொண்டிருந்தேன். ஆமாம், கால் நடையில்தான்.

சினிமாக் கொட்டகையிலிருந்து அரை மைல் தூரத்தில் ஒரு சாவடி; மிகவும் பழைய காலத்தியது. மனித வாழ்க்கையின் ஓட்டைகளைப்பற்றி அதனிடம் கேட்டால் அது நன்றாகச் சொல்லும். அது விஷயத்தில் அவ்வளவு அநுபவம் அதற்கு!

அந்தச் சாவடிப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அதற்குப் பக்கத்தில் தெருவோரமாக ஒரு சிறு சனக்கூட்டம் தென்பட்டது. சிறிது தூரத்தில் எரிந்து கொண்டிருந்த நகரசபை வெளிச்சத்தில் அந்தச் சனகும்பல், நடுவே எதையோ வைத்துவிட்டுச் சுற்றி நிற்பதுபோல் மங்கலாகத் தெரிந்தது.

சனக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே தலையை நீட்டிப் பார்த்தேன்.

ஒரு கிழவனுடைய பிரேதம். அதற்குப் பக்கத்தில் 'ரிக்ஷோ' ஒன்று சரிந்து கிடந்தது. பிரேதத்தின் வாயிலிருந்து ரத்தம் வடிந்து காய்ந்துபோயிருந்தது.

அன்று மாலை நான் ஏறிவந்த அதே 'ரிக்ஷோ'வும் கிழவனும்!

கிழவனுடைய உடல், 'ரிக்ஷோ', சுற்றிநின்ற சனக் கூட்டம் எல்லாம் சுழல ஆரம்பித்தன.

அப்படியே உட்கார்ந்துவிட்டேன், பகவானே! அவன் உயிரைக் குடித்த பழி கடைசியில் என் தலையில்தான் பொறுக்கவேண்டுமா?

சனங்கள் வந்தார்கள், வந்து கூட்டமாக நின்று பார்த்தார்கள், பார்த்துவிட்டுப் போனார்கள்,

மனிதனைச் சுமந்து திரிந்த மனித தேகம் தெருவில் புரண்டுபோய்க் கிடந்தது.

அதன்மேல் ஏறிந்திருந்து சவாரி செய்தவர்கள் வந்தார்கள். நின்ற பார்த்தார்கள், பார்த்துவிட்டுப் போனார்கள்.

*ஈழகேசரி 25.04.1943. மனிதமாடு தொகுதி 1986*

## அ.செ.முருகானந்தன் (அ.செ.மு)

**1921– 2, ஒக்ரோபர் 2022**



**அ.செ.முருகானந்தம்** (அளவெட்டி செல்லக்கண்ணு முருகானந்தம்) ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான எழுத்தாளர் ஆவார். இவர், அ.செ.மு என்ற புனைப்பெயரிலும் அழைக்கப்படுகிறார். இவர் "வெறுப்பும் வெற்றியும்", "பரிசு", "மனித ஆடு" போன்ற பல சிறுகதைகளையும், "சுதந்திரக்காரி" எனும் நாடகத்தையும் எழுதியுள்ளார்.

**படைப்புகள்:** இவர் சிறுகதைகள், நாவல்கள், விமர்சனக் கட்டுரைகள், கவிதைகள் ஆகிய துறைகளில் பங்களிப்பு செய்துள்ளார்.

**ஊடகப் பணி:** இவர் "ஈழகேசரி" பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

**இலக்கியப் பங்களிப்பு**: ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

**மற்ற படைப்புகள்**: சிங்களச் சிறுகதையான "மெனிக்கா ஜாதகம்" என்பதைத் தமிழிலும் எழுதியுள்ளார்.



# ‘அநுரவின் தலைமையில் ...



*நடுவிலான்*

ஜனாதிபதி அநுர அவர்கள் வழமையாக ஆற்றும் உரைகளைப்போலவே யாழ்ப்பாணத்தில் நான்கு செயல் திட்டங்களையும் அங்குரார்ப்பணம் செய்து ஆற்றிய உரைகளும் மிகவும் பெறுமதியானவை. தேசிய மக்கள் சக்தி சிறுகச் சிறுக தனது இலக்குகளை நோக்கி பயணித்து வருகிறது.

நீதி அனைவருக்கும் சமம் என்பதில் அரசு உறுதியாக இருப்பதனை மக்கள் சொத்துக்களை கொள்ளை அடித்தவர்களின்மேல் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வரும் விசாரணைகள், நீதி நடவடிக்கைகள் நிரூபித்து வருகின்றன.

எமது தமிழ் அரசியல் தலைமைகள் அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைத்து வருகின்றன. குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். இனவாத புராணங்களை இவர்கள் எப்போதும் உச்சாடனம் செய்வார்கள். இதனை விட்டால் இவர்களுக்கு பிழைப்பு இல்லை.

ஜனாதிபதி அநுர அவர்கள் தமது எல்லா உரைகளிலும் இனவாதம், மதபேதம், மொழி பேதங்களைக் கடந்து எல்லோரும் இந்த நாட்டு மக்கள் என்ற வகையில் ஐக்கியப்பட்டு நாட்டை கட்டியெழுப்புவதில் ஒன்றுபடவேண்டும் என்பதை வற்புறுத்தி வருகின்றார். மனித நேயம் என்பதை அவர் எப்போதும் முன்னிலைப்படுத்தி வருகின்றார்.அவரது எளிமை, நேர்மை, கூரிய நோக்கு, துறைகள் சார்ந்த நுண்ணறிவு, செயல்திறன் போன்ற பல பண்புகளும் போற்றுதற்கு உரியன. முன்னுதாரணமான மக்கள் தலைவனாக நாங்கள் அவரை பார்க்கிறோம். தமிழ் மக்கள் அவரது கைகளை பற்றிக்கொண்டு தமிழர் களுக்கு தனித்துவமாக இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க முயல வேண்டும்.

இன, மத, மொழி, குல பேதங்கள் இல்லாத ஒப்பில்லாத ஒரு சமூகம் என்று அவர் தனது பேச்சில் அழுத்தமாக குறிப்பிடுகிறார். இவற்றில் இன பேதம் பற்றி பேசும் தமிழர்கள் குல பேதம் அதாவது சாதி பேதம் பற்றி அதிகம் வாய் திறப்பதில்லை .திருமணத் தேடல்களில் இன்னும் சாதியே முதலிடத்தில் உள்ளதை கல்யாணத் தரகர்களின் விசாரணைகளும் கல்யாண இணையத் தளங்களும் நிரூபிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இன்னும் பல கோவில்களில் சாமிகாவுவதும் தேரிழுப்பதும் சாதி அடிப்படையில் தடுக்கப்பட்டு வருகிறது. சில ஊர்களில் சுடுகாடுகளில் இன்னும் சாதிப்பாகுபாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவற்றை மாற்றுவதுபற்றி தமிழ்த்தேசியம் பேசும் பலருக்கு அக்கறை இல்லை.

சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு சட்டம் இலங்கை அரசியல் சட்டத் திருத்தங்களின்போது வலுவாக்கப்படுவதும் சாதி பேதங்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தினை அமுல்படுத்துவதும் அவசியமானதாகும்.இதனை ஜனாதிபதி அநுர அவர்கள் கவனத்துக்கு கொண்டுவர வேண்டும். இதனை யாராவது அரசவை உறுப்பினர்கள் முன்னின்று செய்வார்களா?

நீதியான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் அநுர என்னும் தலைவனுடன் நாம் கைகோர்த்து நடப்போம்.



# கீரையின் சிறப்பு : ஆரோக்கியமும் சுவையும்

*உலவி*

☐ *அறிமுகம்*

கீரை வகைகள் வைட்டமின்கள், கனிமங்கள், நார்ச்சத்து நிறைந்த சத்திய உணவுகள்.

பசலை, அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, முளைக் கீரை போன்றவை, வாரத்தில் 2–3 முறை உணவில் இணைத்தால் ஆரோக்கியம், சக்தி, ஊக்கம அனைத்தும் கூடும்.

*“கீரை சாப்பிடும் பழக்கம், ஆரோக்கியத்துக்கு நாள்தோறும் செய்யும் முதலீடு!”*

☐ *கீரை சமைக்கும் போது கவனிக்க வேண்டியவை*

1. **நன்கு கழுவுதல்** – ஓடைவார்ந்த நீரில் 2–3 முறை கழுவி மண், சிறிய பூச்சிகள் அகற்றவும்.
2. **புதிதான கீரை தேர்வு** – மஞ்சள் நிறமோ, உதிர்ந்த இலைகளோ இல்லாததை எடுக்கவும்.
3. **நேரம் குறைவாக சமைத்தல்** – அதிக நேரம் கொதிக்கவிட்டால் Vitamin C மற்றும் Folate குறையும்.
4. **அலுமினிய பாத்திரம் தவிர்க்க** – ஸ்டீல் அல்லது கலிமஸ்தான் பாத்திரம் பயன்படுத்துவது நல்லது.
5. **உப்பு, புளி இறுதியில்** – புளி, லெமன், தக்காளி போன்றவைகளை இறுதியில் சேர்க்கவும்.

☐ *ரெசிபி । – கீரை மசால்*

*தேவையான பொருட்கள்:*

பசலைக்கீரை – 2 கப் | பாசிப்பருப்பு – ¼ கப் | வெங்காயம் – 1 | தக்காளி – 1 | பச்சை மிளகாய் – 2 | பூண்டு – 3 பல் | மஞ்சள் தூள் – ¼ tsp | உப்பு – தேவைக்கு | கடுகு – ½ tsp | சீரகம் – ½ tsp | எண்ணெய் / நெய் – 1 tbsp

செய்முறை:

- பருப்பு மஞ்சள் தூளுடன் Pressure cooker–ல் வேகவைக்கவும்.
- கடுகு, சீரகம் தாளித்து வெங்காயம், பூண்டு, பச்சைமிளகாய் வதக்கவும்.
- தக்காளி கமாகும்வரைவேகவைத்து, கீரையை சேர்க்கவும்.



- பருப்பு, உப்பு, தண்ணீர் சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிடவும்.

சூடான சாதத்துடன் பரிமாறவும் .

☐ *ரெசிபி 3 – முருங்கைக்கீரை அடை*

தேவையான பொருட்கள்:

அரிசி மாவு – 1 கப் | கடலை மாவு – ½ கப் | முருங்கைக்கீரை – 1 கப் | வெங்காயம் – 1 | பச்சை மிளகாய் – 2 | இஞ்சி – 1 inch | சீரகம் – ½ tsp | உப்பு – தேவைக்கு | தண்ணீர் – தேவைக்கு | எண்ணெய் – தேவைக்கு

செய்முறை:

- எல்லா பொருட்களையும் சேர்த்து அடை மாவாக கலக்கவும்.
- தோசைக்கல் சூடானதும் மாவை பரப்பி, எண்ணெய் விட்டு இருபக்கம் பொன்னிறமாக வேகவைக்கவும்.

காலை உணவாக பரிமாறவும

☐ *ஆரோக்கிய நன்மைகள்*

இரும்பு & கால்சியம்: ரத்தசோகை தடுக்கும், எலும்பு பலம் தரும்.

Vitamin A & C: சக்தியை மேம்படுத்தும்.

நார்ச்சத்து: செரிமானத்திற்கு உதவும்.

வாசகர்கள் குறிப்பு:

காய்கறி, கீரை ரெசிபிகள் குழந்தைகள், முதியவர்கள் எல்லோருக்கும் ஆரோக்கியம் தரும்.

இந்த ரெசிபிகளில் நெய் சேர்ப்பது இரும்பு உடலில் உடனடி உறிஞ்சுதற்கு உதவும்.

பாடல்

# சூரியன் அண்ணா

*ஈழத்துத் தேவன் பூதனார்*



*சூரியன் அண்ணா வா வா*
*சுணங்காமல் சுறுக்காய் வா வா*
*விடியவேணும் வெள்ளண்ண வா வா*
*இருளார் ஓடுவார் ஓடிவா ஓடிவா*

*ஆருக்கும் பயந்து ஒளிக்காதே*
*நாமிருக்கிறோம் அஞ்சாதே*
*இருளார் கொஞ்சம் குளப்படி*
*அவரைக் கலைக்க ஓடிவா ஓடிவா*

*சூரியச் செல்லம் வெயிலார் சுடுவாயோ*
*எரியும் நெருப்பாய் சுடச்சுட வருவாயோ*
*கரிய முகிலின் ஈரமழையில் நனையாயோ*
*அச்சா அண்ணா என்ரை செல்லம்*
*அருகாய் வருவாய் அழகாய் ஒளிர்வாய்*
*வானவில்லைத் தருவாய்*

**தென்புலத்தார் தொழுதேற்றல்**

*நூல்நயம்*

# வீரகாவியம்

**( "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றியவிளக்கவுரை)**

*சோ. தேவராஜா*




## கொம்யூனிஸ்ட் அரசியல் போராளி கே. ஏ. சு

கே.ஏ.சு வை அவரது மூத்தக்கா தங்கமணி கொழும்பு சென். ஜோசேப் கல்லூரியில் சிறுவயதில் சேர்த்துப் படிப்பித்ததுடன் முற்போக்கு அறிஞர்களின் வாழ்க்கை பற்றிய கதைகளையும் அவருக்குக் கூறுவார்.

இந்நூலில் வரலாறு, அரசியல், போராட்டம், போராளிகள், வர்க்கப்பாசம், தீண்டாமைப் போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சி, அதில் இயங்கிய தோழர்கள் பற்றிய விபரக்குறிப்புகளை ஆங்காங்கே பரவலாக எழுதியுள்ளார்.

'ஆயிரத்தில் ஒருவர் சமூக சேவை என்று புறப்பட்டால் அவனை உலகோர் "வாழத் தெரியாத மடையன், பைத்தியக்காரன்" என்று எள்ளி நகையாடுவர். நாம் வாசித்த வரலாற்று நூல்களில் சமூகத்திற்கு நல்ல கருத்துக்களை விழிப்புணர்வுகளை ஊட்டுபவர் சொந்த வாழ்வின் வறுமை, நோய், துன்பம், கை வரட்சி போன்ற இல்லாமை, இயலாமை ஆகிய இடர்களுக்கு ஆளாவார்கள் என்பதனைக் கண்டிருக்கிறோம். ஆயுள் முழுதும் அதனைக் கைக் கொள்ளவோ முன்னெடுக்கவோ முடியாமல் சிலர் இடைநிறுத்தம் செய்கிற இக்கட்டான நிலையால் பின்னடைவு காண்பர். லட்சத்தில் ஒருவர் தனது மூதாதையரின் சொத்தை வைத்து அதனைத் தனது லட்சியத்திற்கும், சமூக மாற்றத்திற்கும் பயன்படுத்துவர். ஒரு சிலர் தனது வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்புடன் ஓரளவுக்குத் தன்னால் முடிந்த நற்காரியங்களைச் செய்வர். சிலர் 'தானுண்டு தன் குடும்பம் உண்டு' என்று ஒருவருக்கும் தீங்கில்லாமல் அமைதியாக வாழ்ந்து முடிப்பர். இப்படி உலகில் பிறந்த மக்களின் வாழ்வு பல ரகம் எனச் சமூகத்தை யதார்த்தமாகக் கணிக்கும் சக்தி வ. சு.வுக்கு வாய்த்துள்ளது.

1969–ம் ஆண்டுச் சட்டமறுப்பு மேதின ஊர்வலம் கே. ஏ. சு. தலைமையில் நடந்தபோது காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். அதில் கே. ஏ. சு. பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அப்போது தோழர் சண்முகதாசன் இணையர் பரமேஸ்வரி எழுதிய கடிதத்தை இன்றுவரை பாதுகாத்து வ. சு. அதனையும் இந்நூலில் பிரசுரித்துள்ளார். இக்கடிதத்தில் வ. சு. வுக்கு 'புரட்சிகர வணக்கம்' சொல்லி பரமேஸ்வரி சண்முகதாசன் நிறைவு செய்துள்ளார்.

'பொலீஸ் அடியால் சிதைந்தார் கே. ஏ. சு. இடதுகை தோள்மூட்டில் தகரம் பொருத்தப் பட்டும், இடது கை சின்ன விரல் கம்பி கோர்க்கப்பட்டும் இருந்தது. எஸ். டி. பண்டாரநாயக்க அவர்கள் இத்தாக்குதல் பற்றிப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசினார்கள் (பக்.77)

கொழும்பில், கொள்ளுப்பிட்டியில் தோழர் சண்ணின் இல்லத்தில் வைத்துப் பராமரித்தனர். மாதக் கணக்கில் தோழர் ஹன்சூர் கே. ஏ. சு. வுக்கு உடை மாற்றுதல், உணவு ஊட்டுதல், கழிவுகள் அகற்றி சுத்தம் செய்தல் போன்ற பேருதவிகளைச் செய்தார்.

'இந்தத் தாக்குதல் எங்கள் ஏழுவருட தாம்பத்திய வாழ்வையும் முடிவுக்கு கொண்டு வந்தது. இவை எதையும் அவர் யாரிடமும் சொன்னதில்லை' (பக்–78)

'பிள்ளைகள் பிறந்த காலங்களில் சரியான கவனிப்போ உணவோ கிடைக்கவில்லை. தோழர் காலை போய் இரவு வருவார். இரவு உணவைச் சமைத்துச் சாப்பிடுவோம். (பக்.81) ஒரு நேர உணவுடன் வாழ்க்கையை ஓட்டியுள்ளனர்.

இல்லறம் பற்றி கே. ஏ. சு.

தேவகுமாரின் திருமணம் கே.ஏ.சுவின் தலைமையில் நடைபெற்றது. தோழர் தாலியை எடுத்துக் கொடுக்க திருமணம் நடந்தது. பின் அவ்வைபவத்தில் அவர் குறிப்பிடப்பட்டதாவது.

"வாழ்க்கை ஒரு போராட்டம். இவர்களுடைய வாழ்க்கையில் இவர்கள் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்று அர்த்தம். இவர்களுடைய வாழ்க்கையில் முதலாவது கட்டம், தமது பாடசாலைக்கல்வி, சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், வறுமைக்கெதிரான போராட்டம் என இவர்கள் இருவரும் தனித்தனியாகக் கடந்து வந்திருக்கின்றனர்.

இன்று இவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத்துணையாக ஒருவரை ஒருவர் சார்ந்து ஈடுபடும் வாழ்க்கைப்போராட்டத்தில் புற உலகில் நாடுகளின் சுதந்திரத்திற்கும் தேசங்களின் விடுதலைக்கும் மக்களின் புரட்சியுடனும் உங்கள் போராட்டம் இணையட்டும். உலக சமாதானத்திற்கும் மனித நல்வாழ்வுக்குமான பெரும் போராட்டத்தில் உங்கள் பங்கும் இணையட்டும்" என்று வாழ்த்தி திருமண நிகழ்வை இனிதே நடத்தினார்.(பக்கம்–189)

### புலம்பெயர் தமிழர் பற்றி கே. ஏ. சு

தோழர் கே. ஏ. சு. புலம்பெயர் தமிழர்கள் செய்ய வேண்டியதென்னவென்று தோழர் தேவகுமாரன் இத்தாலி செல்லும் சந்தர்ப்பத்தில் ஒரு பிரசங்கமே செய்கிறார்.

"இலங்கையிலிருந்து போயிருக்கக் கூடிய தமிழ்த் தோழர்கள், அங்கிருக்கக் கூடிய சிங்களத் தோழர்களுடன் ஒன்றுபட்டுத் தேசத்தின் ஐக்கியத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகக் கூடப் பாடுபட வேண்டும். மற்றது இங்கே உண்மையிலே பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் உழைப்புப் பிரச்சினை சம்பந்தமாகத்தான் அவர்கள் போக வேண்டி வந்தது. சரி அவை அந்த நிலைமையை எடுத்திருந்தாலும் கூட, எதிர்காலத்திலையும் அதை நாட்டின்ரை தேவைக்கும், நன்மைக்கும், நாட்டின் சுதந்திரத்துக்கும் அவை உழைப்பினம் என்பது நம்பிக்கை. அவை செய்வினம் என்றுதான் நம்புகின்றேன். குமார் இப்போ இரண்டாவது முறை வந்து போய் இருக்கிறார். அவருக்கு இத்தாலி அனுபவங்கள் கூட இருக்கும். இத்தாலி நாட்டிலே சரியான மாற்றங்கள் ஏற்பட்டு இருக்குது. அவையின்ர பொருளாதார, சமூக அபிவிருத்திகள் கூட நடந்திருக்கிறது. இன்றும் இங்கிருந்து போனவை இத்தாலி நாட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அங்கே பாடுபடும் அதேவேளை, எங்கட நாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலையும் அவை கூடுதல் பங்கு வகிக்க வேண்டும். அதற்கு அவை அங்கேயுள்ள இளைஞர்களை அணிதிரட்டுவது, அவைக்குக் கல்வியறிவு கொடுக்கிறது, நாட்டு நிலைமைகளை விளங்கப்படுத்துவதன் மூலம் அவை கூடிய சேவையையாற்ற முடியும்."

(பக்கம்– 155) என இவ் உரையாடலை வ.சு. பதிவு செய்துள்ளார்.

### இந்திய அத்துமீறல் பற்றி கே. ஏ. சு

இந்திய வான்படை 1987 ஜூன் 4–இல் இலங்கை அரச அனுமதி இன்றி யாழ் மக்களுக்கு உணவுப்பொருட்களை 'ஒப்பரேசன் பூமாலை' மூலம் வீசியது.

"இந்திய மேலாதிக்க வல்லரசு எம்நாட்டினுள் அத்துமீறி உள் நுழைவதை அனுமதிக்க முடியாது" எனப் புதிய பூமி பத்திரிகையில் கண்டித்திருந்தார்.

அதற்குப் பதிலாக ஈழமுரசு பத்திரிகையில் அதன் ஆசிரியர் எஸ். எம். கோபாலரத்தினம், ஈ.ஆர்.திருச்செல்வம் அதனைக் கண்டித்து இந்தியாவின் உதவியை கொம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை என எழுதினர். (பக்கம்–190)

விடுதலைப்புலிகள், இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987ல் கைச்சாத்திடப்பட்ட பின் மாலைபோட்டு திலகமிட்டு K.K.S ல் இருந்துவந்த இந்திய இராணுவத்தை வரவேற்றனர். அவர்கள் மக்களுக்கு உலர் உணவுப்பொருட்களை வழங்கினர். புலிகளுடன் சண்டை ஆரம்பித்தது. "அவர்களால் வழங்கப்பட்ட எந்த உணவுப் பொருட்களும் வீட்டினுள் வரக்கூடாது" என்று கே.ஏ.எஸ் கூறிவிட்டார்.

யாழ் பத்திரிகை பணிமனைகள் இந்திய இராணுவத்தால் குண்டு போட்டுத் தகர்க்கப் பட்டன. எனவே ஈழமுரசு பத்திரிகை சத்தியமனையில் கோபு தங்கி, அங்கிருந்தே பத்திரிகையைத் தலைமறைவாக வெளியிட்டார்.

"எங்கள் நட்பில் எதுவும் இடையூறாக வர முடியாது. வளரவும் முடியாது" என்றார் மணியம். மணியம் நட்புக்கு வகுத்த இலக்கணம் இது" என்று கோபு குறிப்பிட்டார். (பக்கம்–191)

'வேற்று அரசியலிலும், வேறு தளத்திலும் இருந்து நண்பர் கோபாலரத்தினம் கோபு உண்மைகளை நினைவில் நிறுத்தி எழுதியது, மிகுந்த ஆறுதலை தந்தது. உண்மைகள் புதைந்தழிந்து போகாது என்ற உணர்வைத் தந்தது' (பக்கம்–191) என வ.சு குறிப்பிடுகின்றார்.

1986 களில் 'தோழருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. சலரோகம், உயர் இரத்த அழுத்தம் இவற்றால் மயங்கி விழுந்துவிட்டார். 1966,1969 பாதுகாப்பு படையினரின் மிலேச்சதிகாரத் தாக்குதல்களால் உடல் சிதைந்து போயிருந்தது. அத்தோடு எழுச்சி பெற்று வந்த சமதர்மசமுதாயச் சிந்தனைகள், குறுந்தேசியவாதத்தால் அழுந்தப்

போவதும் தோழருக்கு மனவலியை ஏற்படுத்தியது. வீட்டில் வறுமை, மூத்த மகன் சிறையில், இவருக்கு நோய், எல்லாம் எனக்குப் பயத்தையே தந்தன' (பக்கம் –179) என வருந்துகிறார் வ.சு

இந்த நெருக்கடிச் சூழலிலும் 1986–மே மாதத்தில் நல்லூரில் இருந்து ஆரம்பித்துத் திருநெல்வேலி வரை நடைபெற்ற ஊர்வலத்திலும் கூட்டத்திலும் அந்தச் சுடு வெய்யிலிலும் கே.ஏ.சு. தலைமைதாங்கி நடாத்தினர்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'

'பட்டாளிவர்க்கம் பாராளும் வர்க்கம்– என்ற பல கோசங்களுடன் ஊர்வலம் சென்றது. கூட்டத்தின் தலைமையுரையில் "இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும்போது நீதி மறுக்கப்படும்போது சுதந்திரம் மறுக்கப்படும்போது, நிச்சயமாக பலாத்காரம் இருக்கத்தான் செய்யும். பலவந்தமாகத் தங்களது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்குள்ளது" என்று (பக்கம்–179) பிரகடனப்படுத்தினார்.

"தமிழ் மக்களுடைய வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் அவர்களுடைய தாயகமாக அங்கீகரிக்கப்படவேண்டும்" என்ற முழங்கினார்.(பக்கம்–180)

தோழர்கள்– உட்கட்சிப் போராட்டங்கள் – பிளவுகள்

தோழர்கள் நா. சண்முகதாசன், எஸ். டி. பண்டாரநாயக்க, தோழர் ஹன்சூர், தோழர் கதிரேசு, தோழர் செ. யோகநாதன், தோழர் வீ. ஏ. கந்தசாமி, தோழர்கள் இரவி, சந்திரன், தேவர், யோகேஸ்வரன், தயாளன், கிருட்டி, வேல்முருகன், தோழர் நல்லப்பு, தோழர்கள் சமல் த. சில்வா, ரட்ணாயக்கா, காந்தி அபயசேகர, புதுவை இரத்தினதுரை, சி. கா. செந்திவேல், தோழர் சோ. தேவகுமாரன், பேராசிரியர் சி. சிவசேகரம், தோழர்கள் ஆர்.கே.சூடாமணி, எஸ்.ரி.என். நாகரத்தினம், கே.டானியல், டாக்டர் சு. வே. சீனிவாசகம், சிறீமனோகரன், கதிரவேலு, சதா, நடனசபாபதி, பேராசிரியர் கைலாசபதி, தில்லைநாதன், நுஃமான், மௌனகுரு, எஸ். சிவதாசன், தோழர் கதிரவேலு,தோழர்கள் தம்பையா, இராஜேந்திரன், கவிஞர் முருகையன், நாவலன், குயிலி, ஈ.ஆர். திருச்செல்வம், எஸ். எம். கோபாலரத்தினம் (கோபு), நீதியரசர் வனராஜா இராசரத்தினம், சட்டத்தரணி T.C. இராசரத்தினம், தோழர் அண்ணாமலை, தோழர் சு. வைத்தியலிங்கம், தோழர் எஸ். விஜயானந்தன், தோழர் திருநாவுக்கரசு, இராஜசுந்தரம் மாஸ்ரர், தோழர் எஸ். ஜெய்குமார் என இன்னும் பல தோழர்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்கிறார் வ. சு.

'ஒரு தடவை தோழர் வி.ஏ கந்தசாமியும் தோழர் மணியமும் எமது காலையடி வீட்டிற்கு வந்த போது தோழர் மணியம் பஸ் தரிப்பிடத்தில் இருந்து நடக்கமுடியாது இருந்து அவரைத் தன் கைகளில் காவி வந்ததாகத் தோழர் வி. ஏ. க. சொன்னார் (பக்கம்–99)

'அந்தக் காலப்பகுதியில் மீண்டும் கட்சியினுள் கருத்து மோதல்கள் ஆரம்பித்தன'. 'மீண்டும் பிரிவோ என்கிற பயத்தைத் தோழர்களின் வருகைகளும், கதைகளும் உணர்த்தின. தோழரிடம் 'ஏதாவது பிரச்சினையா' என்று கேட்டபோது " "உட் கட்சிப்போராட்டம் என்பது, சிறந்த மக்களுக்கான அமைப்பை ஒற்றுமையுடன் கொண்டு செல்ல கருத்தை கருத்தில் புரிந்து கொள்வதன்மூலமே முடியும். இவை இருப்பதுதான் சரி" என்றார். (பக்கம்–99)

'ஒரு நாள் காலை தோழர் வீட்டின் வளை மீது 'கொள்கையற்ற நடைமுறை குருட்டுத்தனம். நடைமுறையற்ற கொள்கை மலட்டுத்தனம்' என்று எழுதிவைத்துவிட்டுச் சென்றுவிட்டார். தோழர் வீ.ஏ கந்தசாமி தனியே வந்தார். சுக விசாரிப்புக்களின் பின்னே வீட்டு வளைவைப் பார்த்தார். "ஓ! எனக்காகத்தான் எழுதி வைத்துவிட்டு போய்விட்டாரோ" என்று கேட்டார். அவரிடம் இருந்து தகவல் அறிய நான் முற்படவில்லை. அதை எப்போதும் செய்ததும் இல்லை. "வந்தேன் என்று சொல்லுங்கள். குழந்தைகளைக் கவனமாய்ப் பாருங்கள்" என்று தோழர் வீ.ஏ கந்தசாமி அவர்கள் சொல்லிச்சென்றார். ஏனோ எனக்குக் கண்ணீர் தளம் தட்டியது' என்கிறார் வ.சு.(பக்கம்–100)

"ஜே.வி.பி. பிரச்சினையால் தோழர் சண் ஜெயிலில் இருந்தார். அத்தருணம் வாட்சன் பெர்னான்டோ, றொசாரிபோ ராமையா, E.T. மூர்த்தி, (செங்கொடிச்சங்கத் தோழர்கள்) H.L.K கரவிட்ட, நிகால்டயஸ் எனச் சில தோழர்களுடன் நிர்வை பொன்னையன், வீ .ஏ கந்தசாமி, கார்த்திகேசன் மாஸ்ரர், தோழர் கதிரேசு எனச் சிலரும் தோழர் சண்ணை கட்சியிலிருந்து வெளியேற்றுவதாகக் கூறிப் பிரிந்தனர். தோழர் மணியம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. (பக்கம்–100)

1977 ஓகஸ்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரச்சாரம் செய்தது. இத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி காலையடியில் தேர்தலைப் பகிஸ்கரித்துக் கூட்டம் நடாத்திய வேளையில் நிகழ்ந்த துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில், 'இளைஞர்களை விடுவிக்கவும் தோழர் மணியத்தை சிறை வைக்காத வகையில் வெளியில் எடுக்கவும் இராஜசுந்தரம் மாஸ்ரர் உதவினார்.'(பக்கம்–123)

–அடுத்த இதழிலும்

# தீரனியன் திருவிளையாடல்

## (ஓட்டிச உலகில் நானும் … தன் வரலாறு – மைதிலி றெஜினோல்ட் –நூல் அறிமுகம் )

*செண்பகன்*




**திருவிளையாடல்-08**

ஒருநாள் பல்பொருள் அங்காடிக்கு றினோஷ் குடும்பத்தினரும் சென்றனர். றினோஷ் தாயின் கைகளை உதறிவிட்டு லிப்ற்றால் இறங்கவில்லை. சன நெரிசல் அதிகமானதால் மைதிலியும் றெஜியும் மேல்மாடிகள்இ கீழ்மாடிகள், பக்கத்துமாடிகள் எனத் தேடினர். கட்டிடத்துக்கு வெளியே சென்றால் வாகனங்கள் விரையும் தெருவீதிகள்.

றினோஷைத் தேடிய அவதியில் தம்பி அனோஷைத் தவற விட்டுவிட்டனர்;. அனோஷைத் தேடி சென்றனர். அவனை அந்த இடத்தில் காணவில்லை.

மைதிலியின் தமிழ் நண்பர் லாவண்யா என்ற இருபது வயதுப் பெண்ணும் இவர்களுடன் சேர்ந்து பிள்ளைகளைத் தேடினார்.

"கடவுளே இறங்கி றினோஷைக் கூட்டிக் கொண்டு வந்தது போல இருந்தது. லாவண்யா றினோஷைக் கூட்டி வந்த காட்சி. வாழ்நாள் ஞாபகமோ லாவண்யாவை மனச்சுவரில் இருத்தி வைத்துள்ளேன்" (பக்கம்–231) என்று மைதிலி சொல்வது றினோஷ் முழுமுதற் கடவுளெனில் அவரின் பாதுகாப்பில் சம்பந்தமான லாவாண்யாவும் பக்கத்துணைக் கடவுளாகவே போற்றப்படுதல் தற்செயலல்ல.

"லாவண்யா, றினோஷ் எங்கை நிண்டவர்" என்ற மைதிலியின் கேள்விக்கு லவண்யா பதில் சொல்கிறார்

"நான் தகவல் மையத் துக்குப் போகேக் கயே அங்க இருந்தவர். றினோஷ் மேல கீழ போற லிப்ற்க்குள்ள ஒரே மேலேயும் கீழேயும் அமத்தி அமத்திப் போய்க்கொண்டிருந்தவராம். குழந்தை ஒன்று தனிய நிக்கிறத கண்ட வெள்ளைக்காரர் ஓராள், விளங்கிக் கொண்டு தகவல் மையத்திட்ட ஒப்படைச்சவராம்"(பக்கம்–231).

மேலயும் கீழயும் றினோஷ் சென்றது என்ன தப்பு! அவ்வாறெனில் சிவனின் அடி முடி தேடிய விஸ்ணுவும் பிரம்மாவும் செய்தது தவறாகாதோ !

"உலாத்தல் எண்டால் அவருக்கும் நல்ல விருப்பந்தான். ஆனால் அவருக்காக மட்டும் உலாத்தப் போகவேணும். "ஏற்கனவே றினோஷ் தனக்கெண்ட உலகத்தில் தனிச்சு வாழ்கிறார். அவரை எங்கட உலகத்துக்குள்ள கொண்டு வாறதுதான் எங்களுக்கு இருக்கிற முதலாவது பென்னாம்பெரிய பிரச்சினை (பக்கம்–234)" என்று மைதிலி கிளிக் குஞ்சிக்கு தொலை பேசியில் ஒப்பாரி வைக் கிறார்.

மைதிலி காணும் உலகம் என்ன நல்ல உலகமோ? றினோஷ்; புரிந்து கொள்ள இயலாத உலகம் என்ன உலகம்? உலா செல்வது என்பது மன்னர் முதல் கடவுள் வரை இயல்புதானே !

"உதாரணமா சந்தைக்குப் போறது" நினைச்ச உடன நீங்க வெளிக்கிட்டுப் போய்விடுவீங்க. ஆனா நாங்க முதல்நாள் இரவு றினோஷ் சந்தோசமா இருக்கிற நேரம் பாத்து, எப்பிடிச்சொல்லவேணும் எண்டு சரியாத் திட்டம் போடவேணும். "றினோஷ் நாங்க நாளைக்கு கத்தரிக்காய் வாங்க சந்தைக்குப் போவோம் என்ன" என்று பொறுமையா சாந்தமா அவருக்குத் தடவத்தடவி சொல்லி, அதை ஐஞ்சு நிமிசத்துக்கு ஒருக்கா திரும்பத் திரும்ப சொற்கள் மாறாம ஒரே மாதிரிச் சொல்லி அவர என்ரை திட்டத்துக்குள்ள உள் வாங்கச் செய்ய விடிஞ்சு போடும். அப்ப தான் அவர் சந்தைக்குப்போவோம் என்ற தனக்கு அப்பாற்பட்ட ஒரு விசயத்துக்காக தன்னை மெதுமெதுவா ஆயத்தப்படுத்துவார். இப்படி ஒவ்வொரு அசைவுக்கும் அவருக்கு நேர அவகாசம் நிறையக் கொடுக்க வேணும். சில நேரம் அடுத்த நாள் சந்தைக்கு வரமுடியாமல் திரும்பவும் குளம்பி விடுவார்.

‘ஓ கடவுளே’ (பக்கம் 237) என்று மைதிலி தனது மகனின் திருவிளையாடல் பற்றி நினைக்கும் ஒவ்வொரு சமயத்திலும் கடவுளை நினைப்பது அன்றாட அலுவலாகி வருகிறது அதிசயமில்லைத்தானே!

திருவிளையாடல்–09

அனோஷ் சமூகமளிக்கும் நீச்சல் வகுப்புக்கு பெண் ஆசிரியர் ‘றினோஷும் உள்ள வாங்கோ, நீங்களும் தண்ணீரோட விளையாடலாம்’ (பக்கம்–253) என்று சொன்னதால் பத்து வயது றினோஷை ஆண்களின்ர அறைக்கு உடைமாற்ற மைதிலி அனுப்பிவிட்டார்.

நீண்ட நேரமாய் றினோஷ் வெளியே வரவில்லை.

‘றினோஷ், றினோஷ், றினோஷ்’ என்ற சத்தத்துடன்

மைதிலி தேடினார். தெரு வீதி உட்பட அக்கிராமமெல்லாம் விசாரித்தார்.

'அப்போது பிட்சா கடை ஆனந்தன் அண்ணா வந்ததை (பக்கம்–256) கண்டு மைதிலி விசாரித்தார்.

'அப்போது சிறிய கடைக்காரர் ஒருவர் மைதிலியிடம் உங்கட மகன் என்று நினைக்கிறேன். இதால ஈர உடுப்போட பெரிய கடையை நோக்கி ஓடினார்' (பக்கம்–256) என்று சொன்னதும் தேடி ஓடுகிறார் மைதிலி.

ஆனந்தன் அண்ணாவுடன் றினோஷ் வந்துகொண்டிருக்கிறார். "கடைக்குள்ளை போய் பிறிட்ஜில இருந்து ஐஸ்கிறீம் எடுத்தவராம். அவையளுக்கு ஆளை விளங்கினத்தால சாப்பிடக் குடுத்திட்டு வச்சுக்கொண்டு இருக்கினம். பொலிசுக்கும் தகவல் தெரிவிச்சிட்டினமாம்(பக்கம்–257) என்று ஆனந்தன் விபரித்தார்.

கடவுளுக்கு அந்தக்காலத்தில் குளிர்களி ஐஸ்கிறீம் கிடைப்பதில்லை. அதைத் தேடிய அவரின் அலாதிப்பிரியம் அவருக்கு எந்தத் தடைகளையும் தாண்டும் வல்லமையை ஆண்டவன் பெற்றுள்ளார் என்பது என் கணிப்பு. எவ்வித ஆபத்தும் அவருக்கு நேரவில்லையே!

**திருவிளையாடல்-10**

இன்னொரு சந்தர்ப்பத்தில் மைதிலி றெஜி குடும்பம் பெரிய லீவுக்கு அண்ணரின் கொலண்ட் வீட்டுக்குப் பன்னிரு மணித்திழயாலங்கள் பயணம் செய்து சென்றனர்.

"நொதர்லாந்தில் தொடர் வீடுகளின் ஓரமாக வீதிகள் போன்று ஆழமான நீளமான நீரோடைகள் இருக்கும்" –(பக்கம்–260) அதனால் மேல கீழ போய்வாற றினோஷ் களைத்துப் படுத்துவிடுவான் என்பது மைதிலியின் நம்பிக்கை.

"றினோஷ் நித்திரைதானே, நாங்க கொஞ்சம் கதைச்சிட்டுப்படுப்பம்"என கீழே எல்லோரும் இருந்தோம். இரவு பன்னிரன்டு மணியளவில் மேலே படுப்பதற்காகச் சென்ற போதுதான் அங்கே றினோஷ் இல்லை என்பது எமக்குத் தெரியவந்தது (பக்கம் – 261).

'கடவுளே சாமத்தில எங்க போய்த்தேர்றது. கீழ தண்ணி வேற ஓடுது, ஐயோ கடவுளே, கடவுளே,' என மைதிலி கடவுளுடன் கதைத்தாள் (பக்கம்–261).

மைதிலியின் அண்ணா அவளுக்கு றினோஷ் இருக்கும் இடத்தை காட்டினார். " முகட்டு யன்னலால் வெளியேறி மேலால் நடந்து சென்று அடுத்த வீட்டு முகட்டில் கைகளை கால்களுடன் சேர்த்து வைத்து விறைத்தபடி இருக்கிறார். "கொஞ்சம் தவறினா கீழ ஒரே இருள் மயமாக கிடக்கிற நீரோடை, அம்மாளே" (பக்கம் –262) என மைதிலி அம்பாளை நினைத்தாள். " றினோஷைக் கீழே பாயப்பண்ணி அண்ணா கவனமாக ஏந்திக் கொண்டார் (பக்கம் – 262).

" "தீரனியனின் திருவிளையாடல் என்றாலே டிக்... டிக்... டிக்" மர்மங்கள்தான்.

**திருவிளையாடல்-11**

இன்னொருநாள் பூங்காவில் றினோஷ் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார். நிக்சன் + சுபாவின் மகள் டிஷா றினோஷுடன் சறுக்கீஸில் மேலும் கீழும் விளையாடிக் கொண்டிருந்தார் (பக்கம் – 263).

விளையாடிக் கொண்டிருந்த 'அந்த மகிழ்ச்சியான சமயத்தில் திடீரென மேலிருந்து டிஷாவைத் கிழே தள்ளிவிட்டார்' (பக்கம் –264).

ஓடிப்போய் குழந்தையைத் தூக்கி என் மடியில் வைத்து கன்னத்தில் தட்டினேன். 'டிஷாக்குட்டி எழும்புங்கோ ... டிஷாக்குட்டி எழும்புங்கோ" என்று பதற்றத்துடன் தட்டினேன். கடவுள் புண்ணியமாக உடனே பிள்ளை கண் திறந்தாள். 'அம்மா' என்றாள். "பிள்ளையாரப்பா என்னை வந்து காப்பாத்திட்டாய். பிள்ளைக்கொரு பொல்லாப்புமில்லை" எனக் கடவுளுக்கு நன்றியும், சுபாக்கா நிக்சன் அண்ணாவிடம் மன்னிப்பும் சொன்னேன்" (பக்கம் 265). – கடவுளுக்காக கடவுளிடம் மன்றாடினார் மைதிலி. வேறென்ன சொல்வது?

**திருவிளையாடல் -12**

அன்று இயந்திரத்தை இயக்கி வீட்டை மைதிலி துப்பரவாக்கிக் கொண்டிருந்தார்.இயந்திர "இரைச்சல் தாங்க முடியாமல் றினோஷ் காதை இரண்டு கைகளாலும் இறுக்க மூடியபடி அலறிக்கொண்டு ஓடி வந்தார். கதவிலிருந்த விரலளவு சிறிய சாவியால் உள்ளே என்னை வைத்துப்பூட்டிவிட்டார்."(பக்கம் – 268)

மைதிலி மாட்டுப்பட்டு விட்டார். வெளியேவர இயவில்லை. ஒருவாறு கம்பி இல்லாத சாளரம் வழியாக வெளியேறி றினோஷைக் கூப்பிட்டார்.

வீட்டு நிலத்தில் தண்ணீர் பாய்கிறது. பலமாக றினோஷ் சிரித்த படி உடைகளை கழற்றிவிட்டு நீச்சலடித்தான். பாத்றூம் தண்ணீர்ப் பைப்பைப் திறந்துவிட்டுள்ளான். "கடவுளே என்ன கொடுமை இது. நான் என்ன செய்யிறது? எத்தின மணிவரைக்கும் வெளில நிக்கிறது" என மைதிலி ஒப்பாரி வைத்தாள்.

வர்ண பகவான் தண்ணீர் வெள்ளத்தில். பஞ்ச பூதத்துடன் தீரனியன் விளையாடியதில் என்ன தவறு.

இனிதே திருவிளையாடல் நிறைவுற்றது.

☐

நூல் அறிமுகம்

# மூத்த தமிழ் ஊடகவியலாளரின் முக்கியமானதொரு புத்தகம்

*எஸ். தனுஜன்*

மாக்சியவாதியாகத் தன்னை அடையாளப்படுத்துகின்றவரும், தமிழ்த் தேசிய இன முரண்பாட்டிற்குத் தீர்வு கிடைக்கவேண்டுமென்ற அவாவுடன் தீவிரமாக எழுதி வருகின்றவருமான, மூத்த ஊடகர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்களின் "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" என்கிற சிறிய அரசியல் ஆய்வு நூல் அண்மையில் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எட்டுக் கட்டுரைகளை உள்ளடக்கி, எண்பது வரையான பக்கங்களைக் கொண்டதாக, மார்க்சியக் கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள இப்புத்தகம், இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துவதாகவும், அதைச் சிங்கள மக்களின் சம்மதத்துடன் பெறுவதே நிலையான தீர்வுக்கு வழிகோலும் எனச் சொல்வதாகவும், தமிழ்த் தேசிய இனத்திற்கான அதிகாரப் பகிர்விற்கான முதல் முயற்சியாக மாகாண சபை முறையினை ஆணித்தரமாக முன்மொழிவதாகவும், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வேண்டி நிற்பதாயும், அதற்கு முட்டுக்கட்டையான விடயங்களை வன்மையாக எதிர்ப்பதாயும், இன்றைய என்.பி.பி. (ஜே.வி.பி.) அரசாங்கத்தின்மீது விமர்சனங்களை அடுக்கிக்கொண்டே போவதாயும் அமைந்துள்ளது.




1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு கடந்துவிட்ட 42 வருடங்கள் என்ற தலைப்பில் அமைந்த முதலாவது கட்டுரையில், அக் கலவரங்களுக்கும் கொலைகள், அழிவுகளுக்கும் பின்னால், அன்றைய ஜே.ஆர். தலைமையிலான யு.என்.பி. அரசாங்கத்தின் ஆதரவும், ஆசீர்வாதமும் எவ்வாறு இருந்தது என்பதையும், இன்றுவரை அதற்காக அவர்கள் எந்த வித மனவருத்தத்தினையும் தெரிவிக்கத் தயாராய் இல்லாத மெத்தனப் போக்கினையும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகின்றார்.

பதின்மூன்றாவது திருத்தத்தை தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? என்ற இரண்டாவது கட்டுரையில், புலிகளின் பாதையில் பயணிக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு, மாகாண சபை முறைமையினை எதிர்க்கின்ற தமிழ்த் தரப்புகளை, குறிப்பாகக் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அணியினரைப் பார்த்து, புலிகளிடம் மகாண சபை முறைமையினைக் கடந்து, அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான ஆயுதப் போராட்ட வழி முறை இருந்தது, ஆனால், இப்போது உங்களிடம் என்ன வழி முறை உள்ளது? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம் என்ற மூன்றாவது கட்டுரையில், அண்மையில் நடந்த தேர்தல்களில் தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்கொண்ட சரிவு மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பில் அலசி ஆராய்ந்துள்ளார்.

இலங்கைத் தமிழர் அரசியலில் இராஜவரோதயம் சம்பந்தனின் வகிபாகம் பற்றிய நான்காவது கட்டுரையில், இலங்கை வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த இரண்டாவது தமிழரான சம்பந்தன்

அவர்களுடைய பலங்கள் தொடர்பில் சிலாகித்துள்ளார். அவரது மரணத்தை அடுத்து வெளிவந்திருக்கக் கூடிய கட்டுரை ஆகையால், பலவீனங்களை அலசுவது நாகரீகமாக அமையாது என ஆசிரியர் கருதியுள்ளார் போலும்.

இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையானால், புதிய அரசியல் கலாசாரம் வெற்றுச் சுலோகமே என்ற ஐந்தாவது கட்டுரையில், இலங்கையில் வாழும் தேசிய இனங்களின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்குக் கூடத் தயாரில்லாத, இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் போக்குத் தொடர்பிலான தனது காட்டமான விமர்சனங்களை ஆசிரியர் கொட்டித் தீர்த்துள்ளார்.

2025 உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவுகள் கூறிய செய்தி என்ற தலைப்பிலான ஆறாவது கட்டுரையில், என்.பி.பி அரசாங்கத்திற்கான மக்களின் ஆதரவில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பாகவும், தமிழ் அரசியற் கட்சிகளால் முழுமையாக மீட்சி அடைய முடியாமை பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

2025 ஆகஸ்ட் ஹர்த்தால் கூறிய செய்தி என்ற ஏழாவது கட்டுரையில், கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழரசுக் கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்ட கர்த்தால் தமிழ்த் தேசியத் தரப்புகளின் தனிப்பட்ட அரசியல் குத்துவெட்டுக்களால் பிசுபிசுத்துப் போனமையை இன்றைய தமிழர் அரசியலை விளக்குவதற்கானதொரு சிறந்த உதாரணமாக விபரித்துள்ளார். அதை 1953 இல் இடம்பெற்ற நாடே ஸ்தம்பித்த ஆகஸ்ட் கர்த்தாலுடன் ஒப்பிடுவதன் மூலம் வரலாற்று உதாரணத்தையும் மீள் நினைவுபடுத்தியுள்ளமை பாராட்டுக்குரியது.

புதிய அரசியலமைப்பின் உண்மையான நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? என்ற எட்டாவது கட்டுரையிலே, என்.பி.பி அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் ஆசிரியர், ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்க அவர்களின் முன்னாள் செயலாளர் லயனல் போபகே அவர்களின் கருத்துக்களுடன் கட்டுரையை நிறைவுசெய்கின்றார்.

"பத்திரிகையாளனாக தனிப்பட்ட உணர்ச்சி, விருப்பு வெறுப்புகள் மற்றும் கட்சி அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால், மக்கள் நலன் சார்ந்து மட்டுமே என்னால் இயங்க முடியும்."

என முன்னுரையில் பிரகடனம் செய்துகொள்ளும் ஆசிரியர், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கூறும் இவ் எட்டுக் கட்டுரைகளில் ஒரு இடத்தில்கூட, முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழ் தேசிய இனங்கள் பற்றிக் குறிப்பிடாமல் விட்டமை, பாரிய கேள்வியொன்றைப் பதிலின்றியே விட்டுச் செல்கின்றது.



ஏனென்றால், அவர் வலியுறுத்தும் முழுமையான அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபை முறைமையில் வரும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தில், முஸ்லீம்கள் இன்னொரு பிரதான தேசிய இனமாக இருப்பதுடன், மலையக மக்களும் சிங்களப் பேரினவாத சக்திகளால் இன்று வரையில் பாரிய அச்சுறுத்தலுக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகி வருகின்றமை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடும் அந்நிய சக்திகள் தம்முடைய நலன்கள் சார்ந்தே செயற்படுவார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஆசிரியர், பலவீனமான சிறுபான்மையினராக உள்ள தமிழருக்கு அவர்கள் சில நல்ல விடயங்களைச் செய்ய வாய்ப்புள்ளதாக நம்புவது முரண்பாடாகக் காணப்படுகின்றது.

இந்நூலின் அனைத்துக் கட்டுரைகளினுமூடாக இளையோடுகின்ற ஒரு பிரதான விடயமாக, தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்றே இலங்கையில் இல்லை எனச் சொல்லிவருகின்ற இன்றைய என்.பி.பி–ஜே.வி.பி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான அல்லது விடுதலை வேட்கைக்கான அரசியல் எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது என்பதையும், அவற்றை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகளைத் தனது நீண்ட ஊடக மற்றும் அரசியல் அனுபவங்களில் இருந்து கண்டடைய முயல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

☐

# பொம்மை
## ஈழத்து திரைப்படம்

*சத்தியமலர் இரவீந்திரன்*




18-09-2025 மாலை Cargills கட்டிடத்தில் உள்ள Regal திரையரங்கில் 'பொம்மை' திரைப்படத்தைப் பார்க்கக் கிடைத்தது.

வி.எம்.குகராஜா எம்முடன் இன்றும் வாழும் கலைஞரே! 30 ஆண்டு கால யுத்தம் தந்த வலிகளில் இந்த இழப்பும் அடங்கும். அவரது பறிப்பு, அதன் பின்னர் ஜெயக்குமாரின் பறிப்பு என அடுத்து அடுத்து வந்த பெரும் துயர்கள் இன்றுவரை ஆறாத வலியின் ரணமாக கனன்று கொண்டிருக்கிறது.

"யாருக்கும் நாங்கள் குறைந்தவர் இல்லை, எதிலும் குறைந்தவர் உலகத்தில் இல்லை" என்ற வி.எம்.குகராஜா வரிகளை நிரூபிப்பது போல நிமிர்ந்து தொடர்கிறார் அவர் மகள் நவயுகா குகராஜா. புதியவன் இராசையாவின் ஒற்றைப் பனை மரம் 2023 இல் எமது நூலகத்தில் (கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்) காட்சிப்படுத்திய போதே முதன் முதலாக நவயுகாவையும், அவரது ஆற்றலையும் திரையில் கண்டேன். இனி படம் பற்றிய என் பார்வை :

பொம்மை!

3400 ஆண்டு பழமையான மனித எச்சங்கள் யாழ்ப்பாணக் கடற்கரைப் பிரதேசங்களை ஒட்டிய பகுதிகளில் மேற்கொண்ட அகழ்வாய்வு, இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ துறையினர் வெளியிட்ட தரவுகள் சிலதில் வெளிப்படுகின்றன. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மிக அண்மித்த சான்றாக, மாந்தையில் கி.மு.1600க்கு முற்பட்டவை கிடைக்கப்பெற்றிருந்ததாகவும் சில குறிப்புகள் சொல்கின்றன.

படமும் இதனை அடியொற்றி ஆரம்பமாகின்றது. கண்களை விட்டகலாத, ஒளிப்பதிவுடன் பண்டைய காலத்தை– குரல் வழியாக காட்சிப் படுத்தி ஆரம்பிக் கிறார் இயக்குனர் நவயுகா. முதலே சொல்லி விடுகிறேன், ஒளிப்பதிவு செய்த மாதுனி அழகக்கோன் (Madhuni Alahakoon), படத்தை இயக்கிய நவயுகா பல பாராட்டுகளையும், விருதுகளையும் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மொழிகள் அற்ற கூட்டு வாழ்வில், எதேச்சாதிகார ஆக்கிரமிப்பாளர்களின் மனோபாவம், அவ்வாழ்வை நிர்மூலமாக விழைகிறதாகப் படம் ஆரம்பிக்றது. அதில் ஒரு சிறுமியின் முகமூடி அணிந்த பார்வை, குறியீடாகத் தொடர்கிறது. அது வளர்ந்து ஒன்றிக்கிறது.

எம் மண் கடந்துவந்த 30 காலயுத்தத்தையும், அதன் பின்னான பேசும் கதைகளையும், பேசா வாழ்வையும் எடுத்துச் சொல்கிறது. புங்குடுதீவில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி சிவலோகநாதன் வித்தியாவையும், அதன் குற்றவாளிகள் ஏழுபேரையும் இங்கு ஒரு தூரத்து விளக்காக எடுத்துச் செல்கிறார். போகிற போக்கில் அச் சம்பாவத்தைக் கூறி, அதன் பின்னர் கெடுபிடி அதிகரித்ததாகப் போதைப் பாவனையாளர்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பது போல ஒரு காட்சியையும் துணிவுடன் அமைத்திருப்பார்.

ஆதிவாசிப் பெண், எதேச்சாதிகார ஆக்கிரமி ப்பாளர்களிடத்திலிருந்து, தப்பிப்பதைக், கதையின் நாயகி தன் குறியீடாக்கிக் கொள்கிறார். அதனை சாதாரண பார்வையாளனும் பொருத்திப் பார்க்க தக்க வகையில், காட்சிகளைக் கோர்வைப்படுத்திய எடிட்டர் பாராட்டுக்குரியவர்.

யுத்தத்தில் பங்கெடுத்த போராளிப் பெண், அதன் பின்பான மீள்வாழ்வில் நடந்த மருத்துவ சிகிச்சையில் திட்டமிட்டு (!?) நோயாளியாக்கப்படுவதாக உணர்கிறார். அவர் பொம்மைகளை செய்து உள்ளூர் கடைகளில் விற்பனைக்கு கொடுக்கிறார். அது பேசாப் பொருளாக, வியாபாரம் ஆகாமல் இருக்கிறது.

இதில் ஒரு விஷயம், பொம்மையைக் காட்டுவதற்கு அங்கு செய்யப்பட்டு அடுக்கி வைத்த பொம்மைகளே ஆழமான பார்வையை அதில் பதிய வைத்து விடுகின்றன. அதற்காக மினக்கெட்டு எங்கள் ஊர் மூலத்தைப் பயன்படுத்தி, ஓர் அழகியலை உருவாக்கிக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த வடிவ பொம்மைகளை படத்தின் விளம்பரத்திற்கு விற்பனை செய்யலாம்.

ஓய்வூதியம் பெற்று தனித்து வாழும், மனநிலை குழம்பியதாக நம்பப்படும் ஓர் மூதாட்டி, ஊரில் நடக்கும் அனைத்தையும் உள்வாங்கிக் கொள்கிறார், பஞ்சமா பாதகங்களில் ஈடுபடும் ஓர் இளைஞனைக், காலணியைத் தேடச் சொல்லி அலைக்கழித்து அவரால் கொடுக்கப்படும் தண்டனை ஒரு வடிவம் எனலாம்..

தனிமையில் வாழும் கதாநாயகி தினமும் தன இரவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் காடசி தத்துரூபமானது. அதற்கான ஒளியியல் சிறப்பானது.

நாயகி, ஒரு நூலில் தன்னை ஒன்றிக்க வைக்கிறார். அது " நீலம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அம்பேத்காரின் சிந்தனைத் தொடர்ச்சியா??

அதைவிட நாட்டில் நடக்கும் பாதகச் செயல்களை வெட்டி எடுத்து சேகரித்தது வைக்கும் அவள், தன் நண்பியின் குழந்தையை பாடசாலையில் விட்டு விட்டு வருகிறார். ஆனால் குழந்தை பாடசாலை உடையுடன் காணாமல் போகிறது. சமகால பல குற்றச் செயல்களுக்குப் பின்னிருக்கும் ஆணாதிக்க மனோபாவம் (ஆண்/பெண்) குடி, போதை, இணையத்தை துஷ்பிரயோகம் செய்தல், கைபேசியில் களவாடப்படும் படங்கள், வீடியோக்கள் மூலம் மிரட்டி பணம் பறிப்பது, அல்லது தவறான வழிக்கு வர வலியுறுத்துவது என பலதையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

குழந்தைக்கு என்ன நடந்தது? அதை திரையில் தான் தொடரவேண்டும்.

இது ஒரு குழந்தையின் கதையோ, வழமையான தமிழ் சினிமாவின் திகிலூட்டும் கிளைமார்க்ஸ் காட்சியோ இல்லை. ஒரு குறியீடாக பல பிரச்சினைகளை, ஆண்டாண்டு காலம் அனுபவித்த கொடுமைகளை , பிரச்சனையின் சூத்திரதாரியை அடையாளம் கண்டு தண்டித்தால், அதன் அடிவருடிகள் தாமாகவே விலகி ஓடுவர் . இந்த அவலம் ஆண்டாண்டு காலமாக ,முகமூடிகள் அணிந்தபடி தொடர்கிறது . முடிவு வேண்டாமா?

கடைசியில் ஒட்டி வைத்த பழைய செய்திகள் எல்லாவற்றையும் கூட்டிப் பெருக்கி எரித்து , துணிவுடன் தலை நிமிர்ந்து தொடரலாம் என மிக ஆணித்தரமாகக் கூறி முடிக்கிறார்.

போர், மனித சகிப்புத்தன்மை மற்றும் மோதலுக்குப் பிந்தைய உயிர்வாழ்வு பற்றிய சொல்லப் படாத கதைகளை இந்தப் படம் சொல்லவிழைகிறது. ஒடுக்கப்படும் தேசங்களில் ஆக்கிரமிப்பாளர்களால் அல்லல்படுபவர்கள் எதிர் கொள்ளும் நுணுக்கமான யதார்த்தங்களைப் படம் சொல்கிறது.. அவரது அணுகுமுறை தன் தேசத்தில் வாழ்ந்த அனுபவங்களின் உண்மையான சித்தரிப்புடன் இணைத்து, சினிமாவில் பெரும்பாலும் கவனிக்கப்படாத சிக்கலான மறை பொருளினை வெளிச்சம் போட்டுக் காட்டவிழைகிறார். அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

வரலாறு, மொழியியல் மற்றும் மானுடவியல், அரசியல் ஆர்வத்தால் உந்தப்பட்டு, அவரின் படைப்புகள் வெறும் படங்கள் மட்டுமல்ல, பார்வையாளர்களிடம் பெரும்பாலும் மறக்கப்பட்ட/ மறைக்கப்படட மக்கள், பிரதேசங்களின் கதைகளுடன் இணைக்கும் ஆழமான அனுபவங்களாகும். அவரின் வாழ் அனுபவத்தை தனித்துவமான கதை சொல்லும் பாணியின் மூலம், பார்வையாளர்களை இலங்கையின் கலாச்சார மற்றும் வரலாற்றுக் கட்டமைப்பைத் தேட வைக்கிறார். இது சர்வதேச ரீதியாக தேடவைக்கும் முயற்சி என்றும் கூறலாம்.

நவ யுகத்தை படைக்க முயலும் பெண்கள் அல்லது மாந்தர்களுக்கு எம் நவயுகா, உலகத் தரத்தை நெருங்கும் அர்ப்பணிப்புடன் ஒவொரு செயலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது முன்னுதாரணமாக அமையும்..

தனக்கு வந்த எதிர்மறைக் கருத்துக்களைக் கூட ஒரு குறும்படமாக உருவாக்கியதுடன் , ஒரு எழுத்தாளினியாக, ஒரு இயக்குநராக, ஒரு நடிகையாக தடம் பதித்து, சமூகக் கருத்துக்களை திரைப்படமாகவும், புத்தகங்களாகவும் வெளியிட்டு சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க நினைக்கின்ற வீரமிகு பெண்ணாக இவரைப் பார்க்கிறேன்.

சில வியாபாரத்திற்கான அரசியல் சமரசங்களாக இருந்தாலும், எம் தேசத்தில் இருந்து ஒரு சிறு பெண் ஆழமான கருத்தியலைப் பதிய வைத்திருக்கிறார் எனப் பெருமை கொள்கிறேன். நவயுகாவின் நடிப்பு ஒரு

இடத்தில் கூட கவனச் சிதறலை ஏற்படுத்தவில்லை. இப் படத்தில் நடித்த அனைத்துக் கதாபாத்திரங்களும் ஓரளவுக்கு சிறப்பாகாவே நடித்துள்ளார்கள்.

நவயுகா எப்படி வரலாற்றின் தோற்றுவாயாக தன்னை உணர்ந்தாரோ , நாமும் அவருடன் பயணித்த உணர்வை எமக்குள் ஏற்படுத்தியது அவரின் வெற்றி, எம் நாட்டின் வெற்றி. பேசாப் பெண்களின் வெற்றியும் கூட .

***படத்தின் நடிகர்கள்***

- நவயுகா குகராஜா, யசோதா , திருமலை பிரணவன், சுகிர்தன் கிறிஸ்துராஜா,ரெக்சன் விக்கி, மல்லிகா கீர்த்தி, ஐங்கரன் ஜெனொஷியா
- இயக்கம் – நவயுகா குகராஜா
- ஒளிப்பதிவு – மாதுனி அழகக்கோன் (MADHUNI ALAHAKOON)
- ஹிரன்யா அழகக்கோன் வற்சு
- இசை – M.ரஜனிகாந்த்
- படத்தொகுப்பு – மாருதி.K
- தயாரிப்பு வடிவமைப்பு – ஜோசுவா ஹெபி
- ஒலி வடிவமைப்பு – சிக பூபதிராஜா
- முதன்மை நிர்வாகத்தயாரிப்பாளர் – விக்கி

ஐபிசி தமிழின் தயாரிப்பில் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள பொம்மை திரைப்படம் எதிர்வரும் 19ஆம் திகதி வெளியிடப்படும். அனைவரும் சென்று பார்த்து எம் தேசத்துப் பெண்ணின் ஆளுமையையும், உணர்வையும் மதித்துப் போற்றுவோம்!




# பொம்மை

# மூத்த எழுத்தாளர் அ. ஜேசுராசா பார்வையில்...

ஈழத்தில் தயாரிக்கப்பட்ட 'பொம்மை' திரைப்படத்தை. இன்று யாழ்ப்பாணத்தில்காலைக்காட்சியில் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன் ;

அடைந்த மகிழ்ச்சியில்தான் அந்த இன்ப அதிர்ச்சி!

நெறியாளரான அந்த இளம்பெண்ணிடம் (நவயுகா குகராஜா) இவ்வளவு ஆற்றல் மறைந்து கிடந்து இப்போது வெளிப்படுகிறதா! ;

ஏற்கெனவே, 'ஆறாவது நிலம்' முதலியசில படங்களில் அவரின் இயல்பான சிறந்த நடிப்பை மட்டும் பார்த்துள்ளேன்.

கதை, (அதன் சமகாலக் குறியீட்டுப் பொருத்தப்பாடுகள்), எல்லா நடிகரதும் இயல்பான நடிப்பு, கலையுணர்வுடனான நல்ல காட்சிப்படுத்தல்கள், நுட்பமான படத்தொகுப்பும் இசையும்!

பிறமொழியினருக்குப் பெருமையுடன் நமது படைப்பு எனக் காட்டக்கூடிய, உயர்ந்த திரைப்படைப்பு! நமது மக்கள் இத்தகைய திரைப்படங்களைப் பெருந்திரளாக ஆதரிக்கவேண்டும்.

தமிழக மசாலாத் திரைப்பட இரசனையிலிருந்து விலகிநின்று பார்த்தால்தான், உண்மை விளங்கும்.

பெரிய திரையரங்கில் ஆகப் பன்னிரண்டுபேரே பார்வையாளர் என்பது கவலையைத் தந்தது!

"தமிழ்த் தேசியம்... தமிழ்த்தேசியம் ..." என்று "அரசியல்வாதிகள்" கத்துகிறார்கள் ; ஆனால், எல்லோருமே நமது வாழ்வுச் சூழலை வெளிப்படுத்தும் சிறந்த கலைப் படைப்புகளைப் புறக்கணிக்கிறார்கள்!

அந்தளவுக்கு "மசாலா இரசனை" அந்நிய (இந்திய) மோகம்! "நாமும் நமக்கென்றொரு நலியாக் கலையுடையோம்! " என்ற, நமது முன்னோடிக் கவிஞன் மஹாகவியின்

பெருமித வரிகளை

எந்நாளும் நினைவில் கொள்வோம்!

நவயுகாவுக்கும் எல்லா

(தமிழ் – சிங்கள) கலைஞர்களுக்கும்,

பெருமிதமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்த்து!

–முகநூலில் இருந்து நன்றியுடன்

# வாணி தா மூன்று வரம்

*சில்லையூர் செல்வராசன்*

வாணி தா மூன்று வரம் !
வாணி ! வாணி! வா நீ ! வா நீ !
தமியேன் நெஞ்சத் தரிசனத் தவிசில்!
வா நீ ! வாணி, உன் வடிவம் தா நீ !
ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கின்றாய்
அழகு மயில் ஒன்றருகிலே ! வெள்ளைத்
துகில் அணிந்து வெண் தாமரை மீதில்
வீணையும் ஏடும் விரல்களிலே செப
மாலையும் ஏந்தி, மந்த காசப்
புன்னகை தவழப் பூரணித்தாயே
வீற்றிருக்கின்ற விந்தைத் தோற்றக்
காட்சியில் உள்ளம் கரைந்து நெகிழ்கிறேன் !!!
கரிக் குறை விடாத கற்பூரத்தின்
சுடர் நிகர் ஞானாக் கினி எனும் ஒளியில் உன்!!
தரிசனத் தத்துவத் தாற் பரியத்தின்
சூட்சுமக் கருத்தின் சுருக்கை அவிழ்க்கிறேன் !!
வெள்ளைக் கலை ஏன் ? கள்ளச் சிந்தை
வெள்ளைக் கில்லை என்பதைக் காட்ட!
புள்ளியும் எழுதா வெள்ளைக் காகித
உள்ளம் படைத்த பிள்ளைகள் நிகர்த்த
மாசிலா வாழ்வின் மகிமையை விளக்க !
பாடை புகினும் ஏடது கை விடேல்
என்பதைச் சுட்ட ஏடு விடாக் கை !
"படித்ததை நித்தம் பாராயணம் செய் !
தியானம் என்றும் தேவை"! என்றெலாம்!
செப்பக் கையிற் செபத்திரு மாலை !!
"மீட்டும் மீட்டும் மீட்டிக் கற்றதைச்
சாதகம் செய்தால் சாதனை கிட்டும்",
சித்திரம் கையிலும் செந்தமிழ் நாவிலும்
நித்தம் பழக்கி வைத்தல் சித்தி " என
விளக்கம் பெறக்கை விடாத வீணை!
இருளைக் கண்டால் இதழ்களை மூடும்
தாமரை ஆசனத் தமர்ந்திருப்பதும் ஏன் ?
காலையில் மலர்வதே கல்வித் தாமரை !
ஞானக் கதிரின் ஒளி பெற்றொளிரும்
உள்ளத் தாமரைக் குயர் உவமானம் !
மயிலோ ஆணவ மலமாம் பாம்பை
அடக்கும் சின்னம் ! ஆற்றைப் போன்றே
கலைப் படைப் பாற்றல் சீர் கதியிலே அமைதல்
வேண்டும் என்பதை விளக்கும் ஆற்றங்கரை !
வாழ்க்கையும் ஆறு போல் மேடு, பள்ளங்கள்,
மலைகள், சரிவுகள், மற்றெலாத் தடைகளும்,
நெளிவு சுளிவுடன் நிமிர்ந்தும் பணிந்தும்





இழைந்தும் நுழைந்தும் கடந்து நடந்து
நானிலம் பயனுற நல்வழி காட்டும்
வாணியின் வடிவ வழிகாட்டலின் படி !
ஆவின் மலமாம் சாணியைச் சுட்டு
நீறெனப் பூசி எம் நெற்றிக் கண்ணைச்
சீருறத் திறக்கச் செய்தல், ஆணவ
மலத்தைச் சுட்டு, மாண்புறக் கலைப் படைப்பு
ஆகுதித் தீயின் ஆற்றலை ஓம்பும்
மார்க்கம் என்பதை வழுத்தும் காரியம்!
திரு நீறணிந்து திகழும் தேவியின்
அருளால் நுதற் கண் அடை படாச் சிறைப்படா
சிந்தனைச் சுதந்திரச் சித்தி நாம் பெறுவோம்
சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்து !
வளர்ந்தோர் கூடிய வட்ட மேசையிலே !
வெள்ளைத் தாளிற் கரும் புள்ளி ஒன்றிட்டுக்
கருத்துக் கேட்டார் தலைவர் ! "வெள்ளைக்
கடதாசியில் ஓர் கறுப்புப் பொட்டு" |
எல்லோர் பதிலும் இவ்வாறமைந்தது !
கட்டளைச் சட்டக் கட்டுகளில் சிறைப்
பட்டு வளர்ந்த பாவப் பிறவிகள் !
சின்னஞ் சிறுவர் சேர்ந்த ஓர் அவையில்
ஈதே கேள்வியை எழுப்பினேன் ஒருநாள் !
"நசுக்கிய மூட்டைப் பூச்சி" என்றொரு சிறு
பாலகன் சொன்னான் ! "இல்லை, இல்லை,
செத்த நுளம்பு" எனச் செப்பினான் மற்றவன் !
"முற்றுப் புள்ளி அது" – மொழிந்தான் ஒருவன் !
கட்டளைக் குட்படாக் கற்பனை வளத்தின்
சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்து,
அதே காகிதத்தில் அருகருகாக
மேலே இருந்த தனித்த புள்ளியின்
கீழே இரண்டு புள்ளிகள் இட்டேன் !
"என்ன ஈதென்றேன்" "அடுப்பு" என்றொரு சிறு
மன்னவன் சொன்னான் ! மற்றவன், "இல்லை,
அஃகன்னா அல்லவோ, அது" என மறுத்தான் !
சின்ன என் புதல்வனைக் கேட்டேன் காட்டி !
என்ன அதிசயம் ! அதிசயன் அதனைச்
"சிவபெருமான் சிரசு" எனச் செப்பினான் !
எனக்குப் புரியவே இல்லை எதுவும்!
தாய்க்கும் சிதம்பர சக்கரம் பார்த்த
திகைப்பு ! விளக்கம் கேட்ட பின் புரிந்தது !
நெற்றிக் கண்மேற் புள்ளியாம் ! கீழே
நேத்திரம் இரண்டாம் ! முக்கண் சிவனார் !
மூன்று புள்ளிகளை மூடி ஓர் வட்டம்|
போட்டால் படத்தில் புறப்படுவாராம் !
கட்டளைக் குட்படாக் கற்பனை வளத்தின்
சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்தே!
தாயே ! சரஸ்வதி ! தடைகளில்லாமல்
குழந்தைகள் போலே கோடி கோடிப்
புதுப் புதுக் கற்பனைப் புலமைத் திறன்கள்
செறிந்த எண்ணங்கள் சிந்தனை வனப்புகள்,
படைப்பின் ஆற்றற் பரிமாணங்கள்
நானும் அடைய நல்குன் பேரருள் !
என் மனம், வாக்கு, செயல் எலாம் இப்புவி
மன்குலம் உய்ய வழிசெயும் வகையில்
உன் வரம் வேண்டி, உய் வழி காட்டக்
கோரிப் பணிகிறேன் ! குல தெய்வீ ! என்|
வாணி ! எனக்குமூ வரம் அருள் தாயே!
மணவாளன் எனும் மாயக் குரலோன் !
தீபவர்த்தினி ராகம் இசைத்தே
எரியா விளக்கினை ஏற்றவும், வள்ளல்
அக்பரின் அரண்மனை அடுத்திசை வேந்தன்
தான்சன் என்பான் மேகராகக்
குறிஞ்சியை இசைக்கக் குளிர் மழை பொழியவும்,
மூவள வேந்தர் முன்னால் ஔவை
வெண்பா இசைக்க வெறிதே கிடந்த
குறும்பனந் துண்டம் குருத்தலர்ந் தெழுந்து
மரமாய்த் தழைக்கவும் வைத்த கலாவதி !
பாரோர் உளங்கள் பண்படச் செய, அதே
மூன்று வன்மையும் வேண்டும் இன்றெனக்கே !
இருட்கணம் கப்பிய இதயங்களிலே
இலட்சிய வேட்கை எனும் பெருஞ்சுடர்த்தீக்
கொழுந்தெழுமாறும் கொடிய பாறைக்
கன்மன மாந்தர் கனிந்துளம் நெகிழ்ந்து
கண்ணீர் மழையினைப் பொழிந்திடுமாறும்,
பட்டுக் கிடக்கும் பாழ் மனங்களிலே
அன்பு அறம் அருள் முதல் அத்தனை பண்பும்
தழைத் தெழுமாறும், தமிழினைக் கருவி கொண்டு,
அற்புதக் கவிதைகள் ஆயிரம் ஆயிரம்
பாடிடும் வரமருள் பாதம்
சூடினேன் சிரமிசை சுடர்கலைச் சோதியே !

*சில்லையூர் செல்வராசன் (25 சனவரி 1933 – 14 ஒக்டோபர் 1995) ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர். கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை, நாடகம், வானொலி நாடகம், மொழிபெயர்ப்பு, விளம்பரம் எனப் பரவலான பங்களிப்புச் செய்தவர். தான்தோன்றிக் கவிராயர் எனும் புனைபெயரால பிரசித்தமானவர். தணியாத தாகம் வானொலி நாடகம் திரைப்பிரதியாக நூலாக வந்தது. அத்துடன் ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, சில்லையூர் செல்வராசன் கவிதைகள், தலைவர்கள் வாழ்க மாதோ, தான்தோன்றிக் கவிராயர் 'ஊரடங்கப் பாடல்கள்', சேக்ஸ்பியரின் றோமியோ யூலியட் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.*



# வேதாளமும் முருங்கையும்

**-3-**

*அசன்*

நாவல்

*தொடர்*

வேதாளம் கதை சொல்லத் துவங்கியது.

1974 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஓர் அதிகாலை பொழுது. பேயிருட்டு. நாலு மணிக்கு எழும்புவதாகத் திடடம். நேற்றும் அதற்கு முதல் நாளும் அது எளிதாக இருந்தது. இன்றோ நாலு தரம் எழும்பி எழும்பி மணி பார்க்க வேண்டியதாயிற்று. அவனை அறியாமல் அவனுள் தோன்றிய பயமே இன்று அவனை நேரத்துக்கே எழுப்பியிருக்கலாம். உமிக்கரியில் பல்லை இறுக்கித் தேய்த்தபின் கிணத்தடிக்குப் போய்க் குளிக்க துவங்கினான். முதல் வாளி தண்ணி பட்டதும் சில்லிட்டது தேகம். குளித்து முடிய கிணத்தடியில் சடைத்து வளர்ந்த செவ்வரத்தையில் அப்போது மொட்டவிழ்ந்த பூவை நுள்ளி எடுத்து சுவாமி படத்தின் முன் வைத்து விபூதியை நெற்றியில் தேய்த்து தேவாரம் ஒன்றை உருகிப் பாடினான். குடும்பத்தில் மற்றயோர் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க அசுமாத்தம் எதுவும் இல்லாமல் வெள்ளை வேட்டி சேட்டுடன் வெளிக்கிட்டான் மணியம்.

வீதி எங்கும் இருட்டு இன்னமும் அப்பிக்கிடந்தது. வெற்றிமடத்திலுள்ள புளியமரத்தடி வருமட்டும் மணியத்துக்கு இருட்டு ஒரு பிரச்சினையாய் இருக்கவில்லை. புளியமரத்தில் குடி கொண்டுள்ள முனிகளை குழப்பாமல் அந்த இடத்தைக் கடக்கவேண்டும். ஒன்றுக்கு இரண்டாக வானம் தெரியாத அளவு சடைத்து வளர்ந்த புளியமர கொப்புக்களில் முனிகள் இரவில் வாசம் செய்வதாக பழுத்த அனுபவஸ்தர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள். புளியமரங்கள் இந்த முனிகளின் நிரந்தர வாசமில்லை. வெற்றிமடத்து வடக்கு மூலையில் நின்ற இல்லுப்பை மரம்தான் அதன் பூர்வீக வாழ்விடம். குடித்துவிட்டு முனிகளின் கவுரவத்துக்கு இழுக்காக தாறுமாறாக நடந்தோ சயிக்கிளிலோ செல்பர்களை மட்டும் தாக்கும் உயரிய பண்பு இந்த முனிகளுக்கு உண்டு என பெரியோர்கள் நற்சாட்சிப்பத்திரம் கொடுத்துள்ளார்கள். ஆனாலும் ஒருமுறை இளம் பெண் ஒருவர் இந்த இலுப்பை மரத்தில் தூக்கில் தொங்கி இறந்ததால் பலத்த விவாதங்களின் பின்னர் மரம் வெட்டித் தறிக்கப்பட்டது. முனிகள் இதற்கு பழி வாங்கும் என்று மக்கள் எதிர்பார்த்த போதும் அவை சாந்தமாக புளியமரத்துக்கு இடம் மாறின. வெற்றிமட வளவில் பகல் முழுக்க விளையாடி இரவிரவாக புளியமரத்தடியில் இரகசியம் பேசும் மறு மலர்ச்சி மன்றத்து இளையவர்களை இந்த முனிகள் எதுவும் செய்தது கிடையாது. மணியமும் மன்றத்தில் ஒரு அங்கத்தவனானாலும் முனிகளுக்கு நிரம்ப மரியாதையை கொடுப்பவன். மனதுள் தேவாரத்தை பாடியபடி காலடிச்சத்தம் கேளாமல் மெதுவாக நடந்து புளியமரத்தடி முனிகளை கவுரவப் படுத்தினான். ஒவ்வொரு நாளும் ஒரே தேவாரத்தை பாடினால் முனிகளுக்கு சலிப்பு ஏற்படும் என்பதால் நிறைய தேவாரங்களை மனப்பாடம் பண்ணியிருந்தான். இதனால் அவனுடைய சமய வாத்தியாரின் பெரு மதிப்பையையும் பெற்றிருந்தான்.

கல் ஒழுங்கை தார் வீதியை முட்டும் சந்திக்கு வந்ததும் சிவமும் தவமும் மணியத்துக்காக காத்திருந்தனர். நடையர் கடையடிக்கு வந்ததும் மூவர் ஐவர் ஆயினர். எல்லோரும் இருபது வயதை தாண்டாத இளசுகள். ஒரு யுத்தத்துக்கு செல்லும் உணர்வில் முன்னேறினார்கள். அம்மன் கோயிலை நெருங்க நெருங்க மணியத்தின் இதயத் துடிப்பு அதிகரிக்கத் துவங்கியது. இரவு பெய்த மழையால் பாதையில் குண்டு குழிகள் நீரால் நிரவி இருந்தது. இருண்ட மேகங்களிடமிருந்து வானம் இன்னும் விடுபடவில்லை. மழை எப்போதும் வரலாம் என அது அறிக்கையிட்டது.

'மழை பெய்தால் நிகழ்ச்சி எப்பிடி நடக்கும்'

நிகழ்ச்சி நிறுத்தப்பட்டால் பிரச்சினை முடிந்து விடும் என்ற நப்பாசையில் மணியம் கேட்டான்.

'அது எங்கடை பிரச்சினை இல்லை. அவங்கடை பிரச்சினை. அதைப்பற்றி ஏன் நாங்கள் யோசிக்க வேணும்."

எப்போதுமே வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பேசும் சிவத்தின் பதிலால் மணியம் மவுனித்தான். அவங்கள் விட்டாலும் இவன் விடமாட்டான் போல. சிவம் பிரச்சினைகளை தேடி திரிகிறானோ என்று மணியத்துக்கு சந்தேகம்.

வாசிகசாலையடிக்கு வரவும் மந்திரங்கள் ஒலி பெருக்கப்பட்டு காதை துளைத்தது. இந்தச் சத்தத்தில் பணிபுலதிலுள்ள சேவல்கள் எல்லாம் துயில் கலைந்து ஒரே நேரத்தில் கோரஸாக குரலேடுத்தன.

நாய்களும் தம்பங்குக்கு ஊளையிட்டன. சின்னமேளம் என்று அழைக்கப்படும் சதுர் கச்சேரிக்காக வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையும் வண்ண விளக்குகளும் மழையில் நனைந்து அழுது வடிந்தன. மேடையை சுற்றிவர சேறும் சகதியும் ஏலுமென்றால் இருந்து பாருங்கள் என்று சவால் விட்டன. இந்த நிலையில் இன்று சின்னமேளம் இருக்காது என்று ஆசுவாசப்பட்ட மணியத்தை 'சின்னமேளம் கோயிலுக்குள் இடமாற்றப்பட்டுள்ளது' என்ற தகவல் அவன் இரத்த அழுத்தத்தை ஆர்முடுக்கியது..

இந்த சின்னமேளம் சிங்கப்பூரின் உபயம். சிங்கப்பூரில் வதியும் ஒரு நடுதர வயது தம்பதிகள் சின்னமேளம் பார்க்கும் ஒரு சின்ன ஆசையையும் சுமந்துகொண்டு ஊருக்கு வந்தனர். மார்கழியில் திருவிழாக்கள் இல்லாதபடியால் சின்னமேளம் பார்க்க முடியாது என்பதால் மனம் வெதும்பினார். அவர்களின் துன்பம் கண்டு துவண்ட உறவினர்கள் திருவெம்பாவில் அம்மன்கோயிலில் சின்னமேளம் காட்டி அவர்களை குசிப்படுத்த தீர்மானித்து பொறுப்பானவர்களை அணுகினர். பொறுப்பானவர்களும் வேதங்கள் ஆகமங்கள் என்ற வேலிகளில் ஒரு இடை விரிசலை ஏற்படுத்தி சிங்கப்பூர் வாசிகள் விருப்புக்கு அனுமதி வழங்கினர். இது பற்றி ஒலிபெருக்கி அறிவித்ததைக் கேட்ட அம்மாள் பக்தனான மணியம் அதிர்ச்சிக்கு உள்ளானான். புனிதமான திருவெம்பாவில் சினிமா பாட்டுக்கு இளம் பெண்கள் குத்தாட்டம் போடும் சின்னமேளமா?

மணியம் விஷயத்தை நண்பர்களுக்கு சொன்னான். சூடேறிய இள ரத்தங்கள் வைக்கோலில் நெருப்புக் கொள்ளியை செருகியதுபோல விஷயத்தை பிரமாண்டமாக்கினார் . கோயில் விசயங்களில் தீர்மானம் எடுக்கக்கூடிய அதிகாரம் வாய்ந்த ஐயாவின் வீட்டிற்கு படை எடுத்தனர். அவர் சொன்ன சமாதானங்களை கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை. சிங்கப்பூராரிடம் போய் சின்னமேளத்தை நிறுத்தும்படி கேளுங்கள் என ஐயா தீர்ப்பளித்தார். படை சிங்கபூரார் வீடடை நோக்கி நகர்ந்தது. விவாதத்தை சிங்கபூர் அம்மையார்தான் துவக்கி வைத்தார்.

'இது எங்கடை நீண்ட நாள் கனவு. இதை நாங்கள் வீடியோவிலை படமெடுத்து சிங்கபூர் டீவீயிலை போடுவோம். அதாலை எங்கடை ஊருக்கு பெருமைதானே'

இலங்கையில் டிவி வீடியோ வாராத காலம். அம்மணி தங்களுக்கு நவீன ஆடம்பர வாழ்க்கை வாய்த்தபோதும் கிராமிய கலைகளை வளர்ப்பதில் உள்ள ஆர்வத்தை கிராமத்து எளிய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தயவாய் கேட்டுக்கொண்டார்.

'சின்னமேளம் கிராமிய கலை இல்லை. கிளப்புகளிலை ஆடுகிற டான்ஸ். இந்தியாவிலை ரக்காட் டான்ஸ் எண்டு சொல்லுவினம். திருவிழாகளிலை கூட இதை தடை செய்யவேணும். நீங்கள் திருவெம்பாவிலையும் ஆட வெளிக்கிடுகிறியள். இது டூ மச்.'

தாங்களும் படித்தவர்கள். டிவி இல்லாவிட்டாலும் உலக அறிவுள்ளவர்கள் என்று காட்ட இடையிடையே இரண்டொரு ஆங்கில வார்த்தைகளை அள்ளி வீசினான் அவர்களுள் அதிகம் படித்த தவராசா என்ற தவம். சிங்கபூர் பெண்மணி மன்றத்தாரின் கதைகளை கேட்பதை விட தங்களின் சிங்கபூர் பெருமைகளை மன்றத்தார் மூளைகளில் ஏற்றுமதி செய்வதிலேயே குறியாக இருப்பதை அவதானித்த சிவம்,

'உங்களுக்கு ஆசை எண்டால் சின்ன மேளம் என்ன கபரேயும் ஆடலாம். ஆனால் உங்கடை வீட்டிலை ஆடவேனும். அதை படமெடுத்து சிங்கபூரிலையும் காட்டலாம். உங்களாலை முடிஞ்சால் அமெரிக்காவிலையும் காட்டலாம். ஆனால் எங்கடை கோயிலிலை சின்னமேளம் நடக்க ஏலாது. நீங்களாய் நிப்பாடினால் நல்லது. இல்லாட்டில் நாங்கள் நிப்பாட்ட வேண்டிவரும்."

என்று சொல்லிவிட்டு வெளிக்கிட்டான். படை பின்தொடர்ந்தது.

கோயிலடிக்கு போய் வாசிகசாலை இளையவர்களின் ஆதரவையும் கோரினர். வழமையாக கீரியும் பாம்புமாக அடிபடும் மன்றமும் வாசிகசாலையும் இந்த விசயத்தில் ஒன்றுபட்டது ஆச்சரியமானதே. ஆனாலும் தீர்ப்பு சொல்லுகிற உரிமை தங்கள் கையை விட்டு போவதை உணர்ந்த நாட்டாமைகள் விஷயத்தை தங்களிடம் விட்டு விடும்படியும் தாங்கள் நியாயமான தீர்ப்பை வழங்குவதையும் உறுதியளித்தனர். சிங்கப்பூர் பெண்மணியால் உசுபேத்தப்பட்ட இளைஞர்கள் நாட்டாமைகளின் கதையை கேட்க தயாராக இல்லை. ஒருகட்டத்தில் கோபம் தலைகேறிய நாட்டாமை ஒன்று அவர்களில் அதிகம் படித்த தவம் என்ற தவராசாவை எட்டிக் காலால் உதைத்தார். வயதுக்காகவும் வாத்தியார் என்டதுக்காகவும் சிவம் பொருத்துக்கொண்டாலும் சின்னமேளத்தை காந்திய வழியில் மேடையில் ஏறி சத்தியாக்கிரகமிருந்து தடுப்பது என்ற முடிவில் எவருடனும் சமரசம் செய்யக்கூடாது என்பதில் உறுதி கொண்டான்.

இந்த இளசுகளால் தங்கள் கவுரவத்துக்கு பெரும் பங்கம் ஏற்பட்டதாக கருதிய சில பெருசுகளும் மன்றத்துடன் பொறமை பாராட்டிய சில இளசுகளும் சிங்கபூராரின் உறவினர்களுடன் கூட்டணி அமைத்து

சத்தியாகிரகத்தை முறியடிக்க திட்டங்கள் தீட்டுவதாக உளவு செய்தி கிடைத்தது. இரண்டுபக்கமும் உள்ள உளவுப்படைகளின் தகவல் பரிமாற்றங்களால் திட்டங்களில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டது. யார் யார் எப்போது மேடையை ஆக்கிரமிப்பது என்பது வெகு இரகசியமாகவே வைக்கப்பட்டது. சமரசம் பேச தூதர்கள் வந்தபோதும் அது ஆலோசனைக்கே எடுக்கப்படவில்லை. யார் தூதர்கள் யார் ஒற்றர்கள் என பிரித்தறியமுடியாத நிலை.



என்ன நடக்கும் என்று அரசல் புரசலாக கேட்டறிந்த பெரும்பாலானோர் இன்றைய திருவெம்பாவைக்கு விடுப்பு எடுத்திருந்தார்கள். பெண்களை காணவே இல்லை. கூட்டணியை சேர்ந்த பெண்கள் மட்டும் தங்கள் ஆடவரின் வீர தீர செயலை காண ஒரு மூலையில் காத்திருந்தனர். மழை மீண்டும் தூறத் துவங்கியது. விஷயம் ஏதும் தெரியாத நடன மங்கையர்கள் அரிதாரம் பூசி தம்மை அழகாக்க சிரமப் பட்டுகொண்டிருந்தனர். பூசை முடிந்ததும் எந்தவித அறிவிப்புமில்லாமல் திடிரென நடன மங்கையர் மண்டபத்தின் நடுப்பகுதிக்குள் வந்தனர். இதை ஏற்கெனவே எதிர்பார்த்து வெவ்வேறு கோணங்களில் பதுங்கியிருந்த இளையோர் சடாரென மண்டபத்தின் நடுவில் குதித்தனர். திகைத்துப்போன மங்கையர் பின்வாங்கினர். இனி என்ன நடக்கும் என்று பதை பதைப்போடு நடுவிலே மணியம் குந்தியிருந்தான்.

இரண்டு நிமிடம் கூட ஆகியிராது. வெவ்வேறு மூலைகளிலிருந்து பணிப்புலத்தில் புகழ்பூத்த ரவுடிகள் மண்டபத்துள் வந்து தடி பொல்லுகளால் நடுவிலே குந்தியிருந்த சத்தியாகிரகிகளின் உடம்பில் விளையாடத் துவங்கினர். இந்த ரவுடிகளுக்கு இரவிரவாக சிங்கபூரரின் உறவினர் வீட்டிலேயே தாகசாந்தி செய்யப்பட்டது. அவர்களும் குடித்த குடிக்கு வஞ்சகம் இல்லாமல் வேலை செய்தனர். இதை சற்றும் எதிர்பாராத நடன மங்கைகள் திகைத்துப்போய் கோயிலுக்குள் பின்வாங்கினர். தலை உடைந்த கை உடைந்த இளையவர்கள் அடியை வாங்கியபடி தொடர்ந்து இருந்தனர். அதிக அடி வாங்கிய இருவர் யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எப்படியும்சின்னமேளத்தைவைத்துவிடவேண்டுமென்று கூலிப்படை எகிறிக்குதித்தது. ஆனாலும் பிச்சை வேண்டாம் நாயை பிடி என்று நாட்டியக்காரிகள் ஓட்டம் பிடித்தனர்.

விடிந்ததும் ஊரெல்லாம் இதே பேச்சானது. இளையவர்களுக்கு ஆதரவாயிருந்த ஒரு பெரியவருக்கு இளம்பொடியள் குந்தி இருந்து அடிவாங்கியது கொஞ்சமும் பிடிக்கவில்லை. திருப்பி அடித்திருக்க வேணும் என்றார். சத்தியாகிரகம் என்ற மொழியை புரியக்கூடிய அறிவுள்ளவர்களிடம்தான் அது வேலை செய்யும். முட்டாள்களுக்கு எதிராக சத்தியாகிரகம் செய்வது முட்டாள்தனம் என்றார். பெரும்பாலான இளையோர் அதை ஏற்றுக்கொண்டனர். சிலர் அடுத்த நாள் திருப்பி அடிக்கவும் வெளிக்கிட்டனர்.

கதையை இத்தோடு முடித்த வேதாளம் அந்த பெரியவர் சொன்னது சரியா தவறா என விக்ரமாதித்தனை கேட்டது. ஊரிலே நடந்த இந்தக் கதை விக்கிரமாதித்தனுக்கு ஏற்கனவே தெரியும்.

'எங்கடை கதைய நீ எனக்கே சொல்லிறாய். பெரியவர் சொன்னதுபிழை. மன்றத்தார் அடி வாங்கினாலும் ஊர் அவங்களின்ட நியாயத்தை ஏற்றுக்கொண்டது. மாறாக அடிபட்டிருந்தால் ஊர் இரண்டு பட்டிருக்கும். பகை தொடர்ந்து வளர்ந்து ஊரை உருப்பட விட்டிராது. மக்களிடையே உள்ள முரண்பாடுகள் வன்முறையால் வளருமே ஒழிய தீராது.'

இந்தச் சரியான பதிலால் வேதாளம் மீண்டும் சுருண்டு இறங்குபெட்டியில் உறக்கத்தில் ஆழ்ந்தது

தொடரும்

கவிதை

# வாழ்வதற்கு

*இணுவையூர் இலட்சுமிபுத்திரன்*

சுதந்திரம் என்பது
நூற்றுக்கு நூறு
அவரவர்க்கு ஆனது

எல்லை மீறினால்
தொல்லை தர வல்லது

நாங்களும் நீங்களும்
என்பது அல்ல

நாங்கள் எல்லோரும்
என்றது ஆகணும்

எல்லோரும் வாழணும்
என்ற சிந்தனை
ஏற்றம் மிக்கது

எங்கோ உதைக்குது
நீங்களே ஆழலாம்
என்கின்ற எண்ணிக்கை

அவரவர் வீட்டுக்கு
அவரவர் இராசா
அதுவே நாட்டுக்கு
ஆகணும் லேசா

சரியை செய்வது
சரியானது என்றால்
சனநாயகம் எதற்கு?

சர்வாதிகாரமே
சரியானது அதற்கு.

*6–10–2025*



**8.09.2025 அன்று மறுமலர்ச்சி மன்றம் தியாகராசா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்அரங்கில் இடம்பெற்ற ‘உண்மையே இல்லை பொய்யே’ நாடகத்தின் காட்சிகள்:**













**கலாநிதி ந. இரவீந்திரன் எழுதிய “தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும் “நூல் மீதான விமரிசனக் கருத்தாடல் அமர்வு 13.09.2025 இல் “மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பில்” நடந்தேறியது**
















**எங்கள் முற்றம் ஒக்ரோபர் 2025 இதழ்**

**ஈழத்தின் புகழ்பூத்த பல்கலைவேந்தர்**

**சில்லையூர் செல்வராசன்**

**30வது நினைவு நாள் அனுசரை**

**ஒக்ரோபர் 14, 2025**

**தேசிய கலை இலக்கியப் பேரவை 27வது புத்தக அரங்கத் திருவிழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி 29,30.31 ஓகஸ்ட் 2025 நிகழ்வுகளின் சில காட்சிகள்:**

















